வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk மலர் : 03 18.11.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 345 பக்கங்கள் : 16

சந்திரிகா அறிமுகம் செய்த - சகலரும் ஏற்ற

# பிராந்தியங்களின் ஒன்றியம் முறையை அமுல்படுத்துங்கள்!

## சித்தார்த்தன் எம். பி. வலியுறுத்து



கொழும்பு, நவம்பர் 18

“சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது அறிமுகம் செய்த பிராந்தியங்களின் ஒன்றியம் தீர்வு திட்டம் ஓரளவுக்கு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எனவே, அதனை மீண்டும் எடுத்து, நடைமுறைப்படுத்த வேண்டும்”, இவ்வாறு பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் கட்சியின் தலைவருமான த. சித்தார்த்தன்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் மீது நேற்று பாராளுமன்றில் அவர் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, ஒரு விடயத்தை மறந்து விடக்கூடாது ஜனாதிபதி மீண்டும் மீண்டும் பல தடவைகள் சொல்லியிருக்கிறார், கடந்த காலங்களிலே மக்களுக்கு பிரபல்யமான தீர்மானங்களை எடுத்தார்கள். சில கடுமையான தீர்மானங்களை எடுக்காமல் விட்டதால்தான் இந்த நாடு இப் 15

# 1283 நிறுவனங்கள் அரசுக்கு சொந்தம்!

## பாராளுமன்றத்தில் பட்டியல்

கொழும்பு, நவ. 18

29 அமைச்சுகள், 99 திணைக்களங்கள், 420 செயலகங்கள் உட்பட 1,283 நிறுவனங்கள் அரசாங்கத்துக்கு சொந்தமானவை என்று பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. முதன்முறையாக இந்த விவரம் நேற்று சபையில் தெரிவிக்கப்பட்டது. 15

# 2026 இறுதிக்குள் இலங்கை கண்ணிவெடியற்ற நாடாகும்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, நவ. 18

2026 ஆம் ஆண்டு இறுதிக்குள் இலங்கையை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்ற முடியும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 206 சதுர கிலோ மீற்றருக்கும் அதிகமான நிலப் 15

# மக்களை பிரதமர் தினேஷ் தவறாக வழிநடத்த முயற்சி!

## எதிர்க்கட்சி தலைவர் சாடல்

கொழும்பு, நவ. 18

பாராளுமன்றத்தை கலைப்பதற்கான விதி முறைகள் அரசமைப்பில் இருக்கும் நிலையில், அதனை இல்லை என தெரிவித்து பிரதமர் மக்களை பிழையாக வழிநடத்த முற்படுகின்றார் என்று சஜித் பிரேமதாஸ சாடியுள்ளார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களால் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டால், அந்த நிமிடமே பாராளுமன்றத்தை 15

# சிறுவனை துன்புறுத்திய இல்லக் காப்பாளர் கைது

யாழ்ப்பாணம், நவ. 18

12 வயது சிறுவனை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் சிறுவர் பராமரிப்பு இல்ல காப்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 15

# யாழ். மாநகர சபையில் மாவீரர்களுக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நேற்றைய அமர்வில் தமிழீழ விடுதலை புலிகளின் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு முதல்வர் வி. மணிவண்ணன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது. 15

# ஐந்தில் இரு பெண்கள்மீது பாலியல் துன்புறுத்தல்கள்!

கொழும்பு, நவ. 18

இலங்கையில் ஐந்தில் இரு பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர் என்று பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த நிலைமையை நிவர்த்தி செய்யும் வகையில் சீர்திருத்தங்கள் 15

# ரகுபதி சர்மாவும் விடுதலையானார்!

கொழும்பு, நவ. 18

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீதான குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர் 15

# தமிழருக்கு அதிகாரத்தை பகிர்வது இந்தியா, இலங்கைக்கு ஆபத்தாம்!

## சரத் வீரசேகர சொல்கிறார்



கொழும்பு, நவ. 18

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டால் இலங்கையிலிருந்து அவை பிரிந்து செல்வதற்கான வாய்ப்புகள் அதிகம். எனவே, ஒருபோதும் அதிகாரப் பகிர்வை வழங்கக்கூடாது. மாறாக, கண்டிப்பாக அதிகாரப் பரவலாக்கத்தையே வழங்க வேண்டும். இதுவே இந்தியாவுக்கும் இலங் 15

# வட்டுவாகல் கோட்டா முகாமுக்கு இரகசியமாகக் காணி அளவீடு?

## பொதுமக்கள் நேற்றும் ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, நவ. 18

வட்டுவாகல் கோட்டாபய கடற்படை முகாமுக்கு காணி சுவீகரிப்பதற்காக இரகசியமாக காணி அளவீடு செய்யப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டி அந்த முகாமுக்கு முன்னதாக நேற்று வியாழக்கிழமையும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பில் இருந்து வருகைதந்த நில அளவை திணைக்கள அதிகாரிகளே இரகசிய முறையில் காணி அளவீட்டை மேற்கொண்டனர் என்று போராட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டினர்.



இரகசியமாக காணி அளவீட்டில் ஈடுபடுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படும் குழுவினர் பணியில் ஈடுபட்டவேளை...!

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள 'கோட்டாபய கடற்படை கப்பல்' கடற்படை முகாமுக்காக 617 15

## பிராந்தியங்...

படி போயிருக்கின்றது, ஜனாதிபதி கூறிய கூற்று 100 வீதம் சரி, அவர் ஓரிடத்தில் ஓர் உதாரணம் கூறுகின்றார் முன்னாள் சிங்கப்பூர் பிரதமர் கூறியிருக்கிறார் நான் கடுமையான தீர்மானங்களை எடுத்தேன். பண்டாரநாயக்க பிரபல்யமான, திருப்திப்படுத்துகின்ற தீர்மானங்களை எடுத்தார். அதனால்தான் இலங்கை பின்னடைவுக்கு போய் இருக்கின்றது என்று கூறியிருக்கிறார். இவர் கூறிய விடயம் நிச்சயம் இனப் பிரச்னைக்குரிய விடயம்தான்.

ஏனெனில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் இந்த 1956 சிங்களம் மாத்திர சட்டம், அதிலிருந்து ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்த இனப்பிரச்னை என்பது. அதன் சரித்திரத்துக்குப் போக வேண்டாம், அதனால் ஏற்பட்ட அழிவுகள்தான் பெரிது. அதனால்தான் படிப்படியாக ஒரு யுத்தம் உருவாகி யுத்தத்துக்காக அரசாங்கம் கோடிக்கணக்கான மில்லியன் பணத்தை செலவழித்து இந்த யுத்தத்தை நடத்தி அதற்காக கடனை பெற்று அந்த கடனை அடைக்க மீண்டும் கடனை பெற்று இந்த நாடும் அழிந்து, பின்னடைவுக்கு செல்ல வேண்டிய நிலைமை வந்தது.

இதனை கூறிய ஜனாதிபதி, அவர் ஒரு சரியான முடிவை எடுக்க வேண்டும். அவரும் பிரசித்தமான அல்லது மக்களுக்கு பிரபல்யமான தீர்வை எடுக்க கூடாது. இன்றிருக்கின்ற நிலையில் நியாயமான அரசியல் தீர்வைதான் முழுமையான ஒரு பிரச்னைக்கு யாருமே தீர்வாக சொல்லுவார்கள். ஏனென்றால், ஓர் இனப்பிரச்சனை இருக்கும் வரை நல்லிணக்கத்தை அடைய முடியாது.

நாங்கள் பேசுகின்றோம், நல்லிணக்கம், நல்லிணக்கம் என்று அந்த நல்லிணக்கம் கிடைக்க வேண்டும் என்றால் ஒரு நியாயமான அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். இந்த அரசியல் தீர்வை வைப்பதற்கு கடந்த காலங்களாக பல விடயங்கள் நடந்திருக்கின்றன பல முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அந்த முயற்சிகளுக்கு கோடிக் கணக்கான பணம் செலவழிக்கப்பட்டு இருக்கின்றன.

2020 -21 இல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைத்த நிபுணர் குழுவுக்கு 158 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. அதிலே இவர்கள் 21 மில்லியன் ரூபாயை செலவு செய்திருக்கிறார்கள். இது போல கடந்த காலங்களில் பல கோடி ரூபாய்கள் செலவழிக்கப்பட்டு இவைகள் எல்லாம் கிடப்பிலே போடப்பட்டன. ஆனால், எதுவுமே நடைபெறவில்லை. ஓரளவுக்கு சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இருந்த காலப் பகுதியில் கொண்டு வரப்பட்ட பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தீர்வு ஓரளவுக்கு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

ஜனாதிபதி கூறுகிறார், வருகின்ற சுதந்திர தினத்துக்கு முன்பு அரசியல் தீர்வு ஒன்றை கொடுப்பேன் என்று... இது நல்ல விடயம், அதை நாங்களும் எதிர்பார்த்து இருகின்றோம். இனியும் இதற்காகத் தெரிவு கூட்டங்களை நடத்தி நிதிகளை செலவழிக்காமல் சந்திரிகா முன்வைத்த தீர்வை, அந்த நேரத்திலே வெளிவிவகார அமைச்சராக இருந்தவர் பல விடயங்களை ஆராய்ந்துள்ளார் மற்றும் பல விடயங்களில் ஏற்றுள்ளார்.

ஆகவே அதை மீண்டும் எடுத்து அதை அமுல்படுத்துவத்திலே எந்த கடினமும் இருக்காது. இந்த நாட்டிலே ஒற்றுமை கொண்டுவரப்பட வேண்டும் என்றால் சில விடயங்களை விட்டு கொடுத்தது அதை அமுல்படுத்தலாம். அதுதான் எங்களுடைய கருத்து. (ஐ)

## 2026 இறுதிக்...

பரப்பில் இருந்து எதிர்ப்புக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு பொதுமக்களின் நலனுக்காக விடுவிக்கப்பட்டுள்ளன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள மீள்குடியேற்றப் பிரிவு தெரிவித்துள்ளது. இதன்படி கிட்டத்தட்ட 15 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்படவுள்ளன என்றும் அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், கண்ணிவெடி தடை ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையுடன் கைச்சாத்திட்டுள்ளது. அந்த சாசனத்தின்படி, 2027 ஜூன் மாதத்துக்குள் நாட்டை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்ற வேண்டும். கண்ணிவெடிகளை அகற்றும் அரசாங்கத்தின் அவசர வேலைத்திட்டத்தின் பிரகாரம் 2026 ஆம் ஆண்டு இறுதிக்குள் இலங்கையை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்ற முடியும்

இதுவரை 8 இலட்சத்து 70 ஆயிரத்து 412 சாதாரண கண்ணிவெடிகளும், 2 ஆயிரத்து 169 இராணுவத் தாங்கி எதிர்ப்பு கண்ணிவெடிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன், வெடிக்காத 3 இலட்சத்து 65 ஆயிரத்து 403 இராணுவ வெடி பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 11 இலட்சத்து 84 ஆயிரத்து 823 தோட்டாக்கள் மற்றும் ஏனைய சிறிய ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கண்டெடுக்கப்படும் நிலக் கண்ணிவெடிகள், வெடிமருந்துகள் மற்றும் ஏனைய இராணுவ வெடி பொருட்கள் பொதுமக்களின் கைகளில் சிக்குவதைத் தடுப்பதற்காக இராணுவத்தின் வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவால் அவை வெடிக்க வைக்கப்பட்டு செயலிழக்கப்படுகின்றன - என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## தமிழருக்கு...

கைக்கும் பாதுகாப்பு

இப்படி தெரிவித்திருக்கிறார் அரசதரப்பு பாராளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர.

வரவு - செலவு திட்டம் தொடர்பாக நேற்று பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கணடவாறு கூறினார்.

மேலும், வடக்கு, கிழக்கு பிரிக்கப்பட்டால் தமிழ்நாட்டில் பிரிவினைவாத கருத்துகள் வளர்ச்சியடையும். இதனால், பூகோளரீதியாக பலமான நாடாக மாற வேண்டும் என்ற இந்தியாவின் நோக்கத்துக்கும் அச்சுறுத்தல் ஏற்படும்.

இதனாலேயே புலிகளை தோற்கடிக்க இந்திய அமைதி காக்கும் படைகள் இலங்கைக்கு அனுப்பப்பட்டன. எனினும் இதில் ஏற்பட்ட தோல்விகளாலேயே இந்தியா 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தது - என்றும் கூறினார். (ஐ)

## யாழ். மாநகர...

இதன்போது, எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் நவம்பர் 27 ஆம் திகதி வரை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இருப்பினும், யாழ். மாநகர சபையின் அடுத்த அமர்வு மாவீரர் நாள் முடிந்த பின்பே வரவுள்ளதால் இன்றைய அமர்வில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவது பொருத்தமாகயிருக்கும் என்று பிரதி முதல்வர் ஈசன் வேண்டுகோள் முன்வைத்தார்.

இதை ஏற்று அனைத்து மாநகர சபை உறுப்பினர்களும் இரு நிமிடங்கள் மௌனப் பிரார்த்தனையுடன் அஞ்சலி செய்தனர். (ஐ)

# துப்பாக்கி வெடித்ததில் 4 வயதுச் சிறுவன் பலி!

கொழும்பு, நவ. 18

வாயு துப்பாக்கி ஒன்று தவறுதலாக வெடித்ததில் கதிர்காமம் - தெடகம பகுதியில் 4 வயதுச் சிறுவன்ஒருவர் உயிரிழந்துள்ளதாக கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த சிறுவன் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இதையடுத்து இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கதிர்காமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# செம்மணியில் இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 18

செம்மணி குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இளைஞன் திடீரென நீரில் மூழ்கி காணாமல் போன நிலையில் நேற்று மதியம் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

அந்த குளத்தை அண்மித்த பகுதியில் வசித்துவரும் இளைஞன் ஒருவர்நேற்று முன்தினம் தூண்டிலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த வேளை இவ்வாறு காணாமல் போனார். இதனையடுத்து அப்பகுதி மக்கள் குளத்தில் தேடுதல் நடத்தி வந்தநிலையில் நேற்று மதியம் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைகளாக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சிறுவனை...

திருநெல்வேலியிலுள்ள இல்லம் ஒன்றின் காப்பாளரே இவ்வாறு கைது செய்யபபட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சிறுவனிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தையடுத்து 36 வயதானா சந்தேக நபர் நேற்றிரவு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வட்டுவாகல்...

ஏக்கர் காணிகளை சுவீகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு காணி உரிமையாளர்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

காணி அளவீட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினமும் போராட்டம் இடம்பெற்றது. இந்நிலையிலேயே, நேற்று இரகசியமாக காணி அளவீடு இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டி போராட்டம் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மக்களை...

கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடைக்கின்றது. அதனால் மக்களை பிழையாக வழிடந்த வேண்டாம் என பிரதமரை கேட்டுக்கொள்கிறோம்.

பாராளுமன்றத்தை கலைப்பதற்கு அரசியலமைப்பில் எந்த முறைமையும் இல்லை என பிரதமர் சபையில் தெரிவித்திருக்கின்றார். பாராளுமன்றத்தை கலைப்பதற்கு அரசியலமைப்பில் விதிமுறைகள் இருக்கின்றன. அதனை புரிந்துகொள்ளாமலே பிரதமர் தெரிவித்திருக்கின்றார்.

அரசமைப்பின் 70 (1) அ. பிரிவு மற்றும் ஏ பந்திக்கு அமைய, பாராளுமன்றத்தின் பிரேரணை ஒன்றின் அடிப்படையில் பாராளுமன்றத்தை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு முடியுமாகின்றது.

அதனை எப்போது வேண்டுமானாலும் ஜனாதிபதிக்கு செய்ய முடியும். அதேபோன்று அரசியலமைப்பின் பிரகாரம் இரண்டரை வருடங்களுக்கு பின்னர் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடைக்கின்றது. அதனால் அமெரிக்க முறை இலங்கையில் இல்லை என எமது உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவை பிரதமர் அவமதித்திருந்தார்.

அதனால் மக்களை பிழையாக வழிநடத்த வேண்டாம் என பிரதமரை கேட்டுக்கொள்கின்றேன் - என்றும் அவர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (ஐ)

## 1283 நிறுவனங்...

இந்தப் பட்டியலை நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய வெளியிட்டார்.

வரவு - செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதிக்கு அமைய இந்த பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 29 அமைச்சுகள், 99 திணைக்களங்கள், 420 செயலகங்களும் அரசாங்கத்துக்கு சொந்தமானவையாகும். கூட்டு நிறுவனங்களுடன் சேர்ந்து எல்லாமாக 1,283 நிறுவனங்கள் அரசாங்கத்துக்கு சொந்தமானவை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஐந்தில் இரு...

அமைக்கப்பட வேண்டும் என்று அவர் இதன்போது வலியுறுத்தினார்.

பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான பெண்கள் பொலிஸில் புகார் அளிக்க சரியான சூழல் இல்லை. ஒரு பெண் பொலிஸ் நிலையத்தில் புகாரளிக்க வரும்போது அனைவரும் கூடி விடுகின்றனர். ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் இரகசிய தன்மையை உறுதி செய்ய 13 பெண் காவலர்கள் தேவை என்று கண்டறியப்பட்டுள்ளது - என்றும் அவர் தெரிவித்தார்.

## ரகுபதி...

பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 22 வருடங்கள் புதிய மகசின் சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்து வந்த இந்துமதகுரு நேற்று விடுதலையானர்.

அண்மையில் இலங்கை ஜனாதிபதியால் பெர்துமன்னிப்பு வழங்கப்பட்ட 8 அரசியல் கைதிகளில் ஒருவரான சந்திரா ரகுபதி சர்மாவே நேற்று விடுதலையானார்.

கடந்த 2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 22 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்த அவருக்கு கடந்த 2015 செப்ரெம்பர் 30ஆம் திகதி 300 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. கைதாகியிருந்த நிலையில் அன்றைய தினம் அவரின் மனைவி சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

எனினும் 2015ஆம் ஆண்டு மேன்முறையீடு செய்ததன் மூலம் 13 வருடங்கள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்று வந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

யாழ்ப்பாணத்தில் சில நாட்களாக போதைப்பொருள் பாவனை பற்றியே எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இப்போது மற்றுமொரு புதிய பிரச்னை கிளம்பியிருக்கின்றது.

அது வேறு ஒன்றுமல்ல, இறந்துபோனவர்களின் காணிகளை போலியாக வேறு ஒருவருக்கு விற்றுவிடும் மோசடி பற்றியதே அந்தப் புதிய பிரச்னை.

இறந்துபோன தம்பதியர் பெயரில் போலி அடையாளங்களை செய்து அவர்களின் காணிகளை வேறு நபர்களுக்கு விற்ற மோசடி ஒன்று பற்றி அண்மையில் சில நாட்களாக பரபரப்பு செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

இதுபற்றி தகவல் சேகரிக்க முற்பட்டால், இப்படி பல வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்ற சங்கதிகள் வெளிச்சத்துக்கு வருகின்றன.

அதுபோன்ற ஒரு மோசடியில் கைதான ஒருவருக்காக ஆஜரான தமிழ் மக்கள் நன்கு அறிந்த அரசியல்வாதியும் முன்னணி சட்டத்தரணியுமான ந. சிறீகாந்தா, அந்த மோசடியில் சம்பந்தப்பட்ட முக்கியநபர்களை தப்பிக்க விட்டுவிட்டு தனது கட்சிக்காரரை மாத்திரம் பொலிஸார் கைதுசெய்திருப்பதாக நீதிமன்றில் வாதாடியதைத் தொடர்ந்து, பொலிஸார் மேலும் சிலரையும் அந்த காணி உறுதியை எழுதிய சட்டத்தரணியையும் கைதுசெய்திருந்தனர். கைதுசெய்யப்பட்ட சட்டத்தரணி விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்தச் செய்திகளே இப்போது முக்கிய பேசு பொருளாகியுள்ளது.

இப்போது கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்த சட்டத்தரணியை பிணையில் எடுப்பதற்காக மற்றுமொரு சட்டத்தரணி நீதிமன்றில் வாதிட்டு சட்டத்தரணிக்கு பிணை கிடைக்க உதவியதை பலரும் சமூகவலைத்தளங்களில் பதிவுசெய்து தத்தமக்குத் தெரிந்த வகையில் வியாக்கியானம் செய்து வருவதைக் காணமுடிகின்றது.

அதிலும் இந்த ஊர்க்குருவி மதிக்கின்ற ஒரு கல்வியாளர், புத்திஜீவி ஒருவர் சட்டத்தரணியை பிணையெடுக்க உதவியதை கேள்விக்கு உட்படுத்தியதை காணமுடிந்தது.

போலி உறுதியை எழுதிய சட்டத்தரணி குற்றவாளியா இல்லையா என்பது இன்னமும் நிரூபிக்கப்படவில்லை. அது அல்ல இங்கே நாம்சொல்ல வருவது.

அந்தக் காலத்தில் கிராமத்துக்கு ஒரு நொத்தாரிசு இருந்து வந்ததை நாம் அறிவோம். இப்போதெல்லாம் அப்படி ஒருவர் நொத்தாரிசாக மாத்திரம் இருக்கிறாரா என்பது தெரியவில்லை. ஆனால், அப்படி கிராமத்துக்கு ஒருவர் நொத்தாரிசாக இருக்கின்றபோது அவர், கிராமத்திலுள்ள அனைவரையும் அறிந்தவராக இருப்பார். அவர் உறுதி எழுதுகின்றபோது காணி சொந்தக்காரரை மாத்திரமல்ல, வாங்குபவரைக் கூட அறிந்தவராகத்தான் இருப்பார். இதனால் இதுபோன்ற தவறுகள் நடக்க வாய்ப்பிருக்கவில்லை. இப்போது நகரத்தில் உள்ள எல்லா சட்டத்தரணிகளுமே நொத்தாரிசாகவும் (ஒருசிலர் அதனை விரும்புவதில்லை) இருப்பதால் அவர்களுக்கு காணி எழுதினால்தான் பணம் கிடைக்கும் என்ற நிலை.

காணியை விற்க வருபவரையோ வாங்க வருபவரையே அவருக்கு தெரிந்திருக்க வேண்டுமென்பதல்ல.

ஒரு காணியை வாங்கப்போவதாக ஒருவர் ஒரு நொத்தாரிசை (சட்டத்தணியை) அணுகினால், இவர் அவருக்கான சட்டத்தரணியே. வாங்குபவரின் நலனை இவரே கவனிக்கவேண்டும்.

காணி உறுதியை மாத்திரமன்றி அந்தக் காணிச் சொந்தக்காரர் பற்றியும் இவர் கவனம் செலுத்த வேண்டும். ஆனால், அப்படி காணி தன்னுடையது என்று வருபவர், அந்தக் காணிக்காரரின் பெயரில் அடையாள அட்டையையும் வைத்திருக்கிறார் என்றால், அது ஒன்றே போதுமானது என்று எடுத்துக்கொள்ள முடியுமா? ஏனெனில், இன்று நமது நாட்டில் வேறு ஒருவர் பெயரில் பாஸ்போர்ட் எடுப்பதே சர்வ சாதாரணமாகி விட்டது.

ஆனால், இவருக்கு முன்பின் தெரியாத ஒருவர் இவரிடம் உறுதி எழுத வருகின்றார் என்றால் எதற்காக என்ற கேள்வி முதலில் இவருக்கு எழுந்திருக்கவேண்டும். காணியை வாங்குபவரும் விற்பவரும் இணைந்தே இதுபோன்ற மோசடிகளில் ஈடுபடவும் வாய்ப்பு இருக்கின்றது.

இந்த விவகாரம் தொடர்பாக ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவருடன் பேசியபோது அவர் சொன்னார், வாங்குபவரையோ அல்லது விற்பவரையோ ஏன் சாட்சிகளைக்கூட அந்த சட்டத்தரணி அறியாதவராக இருந்தாலும், அனைவரையும் அடையாள அட்டைகள் மூலமே தான் உறுதிசெய்வதாக உறுதியிலும் பதிவுசெய்து கொண்டால் சட்டத்தரணியில் தவறே இல்லை என்றார்.

ஆனால், எமது கவலை எல்லாம் சட்டத்தரணி எப்படி தப்பிப்பது என்பதல்ல. இதுபோன்ற மோசடிகளை எப்படி தவிர்ப்பது என்பதுதான்.

காணியை விற்பவருக்கு பணத்தைக் கொடுப்பதற்கு பதிலாக வங்கி கட்டளைகளை அதுவும் அவரின் அடையாள அட்டை இலக்கத்தையும் பதிவுசெய்து வழங்கினால் இதுபோன்ற மோசடிகளைத் தவிர்க்கலாம் என்கிறார் மற்றும் ஒரு மூத்த சட்டத்தரணி.

இதனைக்கூட கட்டாயமாக்குவது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துவது நல்லது.

இல்லையெனில், வெளிநாடுகளில் வாழ்கின்ற நமது உறவுகளின் காணிகளையும் இதுபோன்ற மோசடிகள் மூலம் கபளீகரம் செய்வது தொடரத்தான் செய்யும்.

இன்னுமொரு கொசுறுத் தகவல், வெளிநாடுகளிலில் வாழும் நம்மவர்கள் சிலர் இங்கு பல காணிகளை அளவுக்கதிகமான விலையில் வாங்கிவிட்டு அதனை பராமரிக்கவும் ஆட்களை நியமித்த விட்டு சென்றுவிடுகின்றனர். இவ்வாறு வாங்குபவர் இரட்டை பிரஜா உரிமை இல்லாதவரென்றால், அவர் காணி வாங்குவதும் சட்டவிரோதமானதுதான். தந்தை அவ்வாறு காணியை விற்று பணம் பெற்ற பின்னர், மகன் அந்த உறுதி செல்லாது, அவர் காணி வாங்குவதற்கே சட்டபூர்வ அனுமதி அற்றவர் என்ற வழக்குகளும் நடந்துகொண்டிருக்கின்றனவாம்.!

**- ஊர்க்குருவி**

# தலைமன்னாரில் கைதாகிய 14 இந்திய மீனவர் விடுதலை

மன்னார், நவ. 18

இலங்கைக் கடற்படையினரால் தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 14 இந்திய மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 06ஆம் திகதி கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 14 பேரும் மன்னார் நீதவான் நிரஞ்சனி முரளிதரன் முன்னிலையில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டமை மற்றும் தடை செய்யப்பட்ட இழுவைமடி மீன்பிடி முறையில் மீன்பிடித்தமை ஆகிய 02 குற்றச்சாட்டுகள் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரால் சுமத்தப்பட்டிருந்தன.

02 குற்றச்சாட்டுகளுக்கும் தலா 10 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருடம் வீதம் 02 வருட சிறைத்தண்டனை விதித்து நீதவான் உத்தரவிட்டார்.

மீனவர்களை மிரிஹானை முகாமிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கையை இந்திய தூதரகம் மேற்கொள்ளவுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் உள்ளடங்கியுள்ள 14 வயதான சிறுவன், நேற்று மன்றுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

இவரை உறவினர்கள் ஊடாக மிரிஹானை முகாமுக்கு அனுப்புமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன் கைது செய்யப்பட்ட இந்திய படகின் உரிமையாளரும் மன்றில் ஆஜரானதுடன் தமது படகை விடுவிக்குமாறு சட்டத்தரணி ஊடாக கோரிக்கை விடுத்தார்.

படகின் உரிமையாளரை மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்திடம் வாக்குமூலம் வழங்குமாறு நீதவானால் உத்தரவிடப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 30ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அத்துடன், அடுத்த வருடம் ஜூலை மாதம் 13ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு மற்றைய படகின் உரிமையாளருக்கு நீதவான் கட்டளை பிறப்பித்தார். (அ)

# இலங்கைப் பெண்கள் 12 பேர் ஓமானில் ஏலத்தில் விற்பனை!

## உடன் நடவடிக்கை எடுப்பதாக விஜயதாஸ உறுதி

கொழும்பு, நவ. 18

இலங்கைப் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பாலியல் தொழிலுக்காக அமர்த்தப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவல் தொடர்பில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

எதிர்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன நேற்று பாராளுமன்றில் முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ இதனை தெரிவித்தார்.

அபுதாபியில் வீட்டுப் பணிப்பெண் தொழிலில் அமர்த்துவதாக தெரிவித்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கையை சேர்ந்த 12 பெண்கள் ஓமானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஓமானுக்கு அனுப்பிவைக்



கப்பட்ட குறித்த பெண்கள் அங்கு நடைபெற்ற விழாவொன்றில் பாலியல் தொழிலுக்காக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளனர்.

தமது பிள்ளைகளின் எதிர்காலம் கருதி, தற்போது ஏற்பட்டுள்ள பட்டினி நிலையை போக்குவதற்காக தாய்மார்கள், சகோதரிகள், ஆகியோர் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பை தேடிச்செல்கின்றனர். இந்த நிலையில், எமது நாட்டின் பொருளாதார நெருக்கடியை சீர்செய்ய தன்மானத்தை அடகு வைக்க முடியாது.

இது தொடர்பில் நீதி அமைச்சர் ஏன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன கேள்வியொன்றை முன்வைத்தார்.

இதற்கு பதிலளித்த நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்‌ஷ, வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள், விதிமுறைகளையும் நியதிகளையும் மீறிச் செயற்படுகின்றன. அதேபோன்றுதான் சிலரின் நடவடிக்கைகளினால் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றிருக்க ஏதுநிலை காணப்படுகின்றது.

ஆகையினால் குறித்த சம்பவம் தொடர்பில் அவதானம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வோம் என குறிப்பிட்டார். (அ)

# ஏழை மக்களை புரிந்துகொள்ளாத அரசு!

## ஹரிணி அமரசூரிய எம்.பி. விசனம்

கொழும்பு, நவ. 18

நாட்டின் ஆட்சியாளர்கள் செய்த தவறுகளின் காரணமாக தற்போது சலுகைகளை நம்பியிருக்கும் ஏழை மக்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தினால் குற்றவாளிகளாக் கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றில் தெரிவித்தார்.

தமக்கு கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தமது வாழ்க்கையைச் சரியாக நிர்வகிக்க முடியாத குடிமக்கள் மீதே இந்தப் பழி சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இந்தப் பிரச்னையை இவ்வாறான கண்ணோட்டத்தில் பார்ப்பதென்பது எவ்வளவு தீமையான விடயமெனவும் கேள்வி எழுப்பினார்.

மூன்றாம் நாள் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஹரிணி அமரசூரிய இவ்வாறு குறிப்பிட்டார்.

வரவு - செலவுத்திட்டம் பிரச்னையையோ, அரசியல் சூழலையோ புரிந்து கொள்ளவில்லை. மக்கள் அரசாங்கத்திடம் என்ன கேட்கிறார்கள் என்ற உணர்வைக்கூட இந்த அரசாங்கத்தினால் புரிந்து கொள்ள முடியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால் அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்"

*- நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)*

ஈழநாடு
Eelanadu
18.11.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 02

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எவ்வாறு பேச வேண்டும்?

ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்னைக்கான தீர்வை காணவுள்ளதாகக் கூறுகின்றார். இது தொடர்பில் தமிழ் கட்சிகளுடன் பேசவுள்ளதாகக் கூறுகின்றார். இதனைத் தொடர்ந்து எவ்வாறு பேசுவதென்னும் சலசலப்புகள் தமிழ் கட்சிகள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றன. இந்த பின்புலத்திலேயே சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு தொடர்பில் பேசுவதற்கு அனைத்து தமிழ் கட்சிகளையும் சம்பந்தன் இல்லம் வருமாறு தன்னிச்சையான அழைப்பொன்றை சுமந்திரன் பத்திரிகைகளின் வாயிலாக வெளியிட்டிருந்தார். சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை ஏற்றுக் கொண்டால்தான் தாங்கள் பேச்சில் கலந்துகொள்வோமென்று கஜேந்திரகுமார் தெரிவித்திருக்கின்றார்.

இது வழமையான அரசியல் சுலோகங்கள்தான். இலங்கை தமிழ் அரசுக் கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து ஒவ்வொரு தேர்தல்களின் போதும் கூறும் விடயங்கள்தான். சமஷ்டி தொடர்பில் போதனைகள் செய்ய முற்படும் அனைவருக்கும் தெரியும். அவ்வாறானதொரு நிபந்தனையின் அடிப்படையில் ரணில் மட்டுமல்ல எந்தவொரு தென்னிலங்கை சிங்கள அரசியல்வாதியும் பேச்சுக்கு வரப்போவதில்லை. இந்தியா இவ்வாறானதொரு கோரிக்கை தொடர்பில் கரிசனை காண்பிக்காது. இதேபோன்று, இலங்கையின் பொறுப்பு கூறல் தொடர்பில் கரிசனை காண்பிக்கும் அமெரிக்கா மற்றும் இணை அனுசரணை நாடுகளும் இதில் ஆர்வம் காண்பிக்கப் போவதில்லை. எனவே, பேச்சு உண்மையிலேயே இடம்பெறுமாயின், அதனை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும்? எவ்வாறான விடயங்களை ஆரம்ப இடைக்கால மற்றும் நீண்டகால அடிப்படையில் முன்வைக்க வேண்டுமென்பதில் தமிழ்த் தேசிய கட்சிகள் மத்தியில் கருத்தொருமைப்பட்ட உடன்பாடு ஏற்படுதல் அவசியம். சமஷ்டியை ஒரு விடயமாக முன்வைத்து எந்தவொரு பேச்சையும் முன்னெடுக்க முடியாது.

அவ்வாறாயின் பேச்சை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும். ஒருவேளை பேச்சு இடம்பெற்றால் மட்டுமே இந்த விடயங்கள் பயனுடையவை. இதனை இந்த இடத்தில் அழுத்தமாக குறிப்பிடுகின்றோம்.

ரணில் விக்கிரமசிங்க அனைத்து கட்சிகளையும் சந்தித்தால் முதலில் அரசமைப்பில் இருக்கின்ற விடயங்களை அமுல்படுத்துங்கள் என்பதுதான் முதலாவது கோரிக்கையாக இருக்க வேண்டும். அவ்வாறில்லாது, ஒரு புதிய அரசியல் தீர்வுக்கான முன்மொழிவை முன்வைத்தால், அதனை ரணில் ஏற்றுக்கொள்ளலாம். அதனை நடைமுறைப்படுத்துவதாகவும் அவர் கூறலாம் மீண்டும் ஒரு புதிய அரசியல் யாப்புக்கான விவாதங்கள் ஆரவாரமாக முன்னெடுக்கப்படும். அந்த விடயத்தை முன்னிலைப்படுத்தியே சர்வதேச சமூகத்தை ரணில் அரசாங்கம் எதிர்கொள்ளும். நாங்கள் தமிழ் கட்சிகளுடன் பேச்சில் ஈடுபட்டுவருகின்றோம். இதனை ஆக்கபூர்வமாக முன்னெடுப்பதற்கு சர்வதேசம் தங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்பார். அடுத்த ஆண்டு மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஜெனிவா கூட்டத் தொடரை எதிர்கொள்ளும் ஒரு துருப்புச் சீட்டாகவே, தமிழ் கட்சிகளுடனான பேச்சு பயன்படுத்தப்படும்.

எனவே, ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சுக்கான அழைப்பை தந்திரோபாய ரீதியாக எதிர்கொள்ள வேண்டுமாயின், ரணில் விக்கிரமசிங்கவிடம் முதலில் அரசமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துங்களென்றே கூறவேண்டும். அவர் அதில் எந்தளவு ஈடுபாட்டை காண்பிக்கின்றார் என்பதை கொண்டு, அடுத்த கட்ட பேச்சுகள் தொடர்பில் சிந்திக்கலாம். அவ்வாறில்லாது, சமஷ்டியென்னும் ஒரு சொல் கொண்டு விடயங்களை அணுகினால் ரணில் – மைத்திரி ஆட்சியின்போது கிடைத்த அனுபவங்களே மீளவும் கிடைக்கும். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எண்ணத்தை ரணில் விக்கிரமசிங்க கொண்டிருந்தால் ஒருபோதும் நிபந்தனை அடிப்படையில் தமிழ் கட்சிகளுடன் பேசப்போவதில்லை. இதனை இன்னொரு வகையில் எதிர்கொள்வதாயின் ஒரு ஸ்திரமான அரசாங்கம் உருவாகும்வரையில், இனப்பிரச்னைக்கான பேச்சில் பங்கொள்வதை தவிர்க்க வேண்டும். பிறிதொரு விடயத்தையும் தமிழர் தரப்பு கவனத்தில் கொள்ள வேண்டும் – அதாவது, நாங்கள் நிபந்தனைகளை முன்வைத்து விடயங்களை முன்னெடுக்கக்கூடிய பலமான நிலையில் இல்லை.

# ஓமானில் வேலை தருவதாக கூறி அழைத்து செல்லப்பட்டு அபுதாபியில் அடைக்கப்பட்டுள்ள இலங்கைப் பெண்கள்!

## மற்றொரு மனிதக் கடத்தல் மோசடி அம்பலம்

*கொழும்பு, நவ. 18*

*ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள அபுதாபியில் சிக்கித் தவிக்கும் பல பெண்கள் இலங்கையில் உள்ள ஒரு குடும்பத்தினரைத் தொடர்பு கொண்டு உதவி கோரியதை அடுத்து சந்தேகத்திற்கிடமான மனித கடத்தல் மோசடி அம்பலமாகியுள்ளது.*

*துஷ்யந்த் வீரமன் மற்றும் ஸ்டீபனி சிறிவர்தன தம்பதியரிடம் பணிபுரிந்த வீட்டுப் பணிப்பெண் தனக்கு ஓமானில் வேலை கிடைத்ததாகக் கூறி, அங்கிருந்து வெளியேறியதை தொடர்ந்து இந்த மோசடி வெளிச்சத்துக்கு வந்தது.*

*ஓமான் செல்வதாக குறிப்பிட்டு புறப்பட்ட அந்த பெண், பின்னர் தனது மகளுடன் தொடர்பு கொண்டு,16 பெண்களுடன் ஒரு அறையில் அடைக்கப்பட்டுள்ள தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.*

*அந்தப் பெண்ணின் மகள் பிரபல தம்பதிகளான துஷ்யந்த் வீரமன் மற்றும் ஸ்டீபனி சிறிவர்தன ஆகியோரை தொடர்பு கொண்டு உதவி கோரியுள்ளார்.*

*அறையில் அடைக்கப்பட்டிருந்த பெண்களின் கடவுச்சீட்டு, கைத்தொலைபேசி என்பன எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாகவும், மறைத்து வைத்திருந்த தொலைபேசியின் ஊடாக தொடர்பு கொள்வதாகவும் அந்தப் பெண் மகளிடம் கூறியிருந்தார்.*

*இந்த பெண்களில் பெரும்பாலானவர்கள் ஹற்றன் பகுதியை சேர்ந்தவர்கள். ஓமானிற்கு அழைத்துச் செல்லப்படுவதாக அந்த பெண்களுக்கு குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவர்கள் தற்போது ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள அபுதாபியில் இருப்பதைக் கண்டறிந்தனர்.*

*“ஆவணங்களை ஆய்வு செய்த பிறகு, பெண்கள் விசிட் விஸாவில் அபுதாபிக்கு பயணம் செய்ததை நாங்கள் கண்டுபிடித்தோம், வேலை விசாவில் அல்ல,” என்று சிறிவர்தன கூறினார்.*

*ஹற்றனை தளமாகக் கொண்ட தரகர் ஊடாக குறித்த பெண்கள் கட்டுகஸ்தோட்டையில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு உப முகவர் நிலையமொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக வீரமன் தெரிவித்துள்ளார்.*

*மருதானையில் உள்ள பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்திற்கு உப முகவர் தகவல் அனுப்பியிருந்தார்.*

*ஐக்கிய அரபு எமிரேட்ஸில் மட்டுமே பணிபுரிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் பெண்களை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்துள்ளது.*

*பதிவு செய்தவுடன், பெண்களுக்கு பயணச் சீட்டுகள் தரகர் மூலம் வழங்கப்பட்டு, விசிட் விசாவில் அபுதாபிக்கு அனுப்பப்பட்டது,*

*“இந்தப் பெண்களுக்கு விசிட் விசாவில் ஓமானுக்குச் சென்று வேலை செய்ய முடியாது என்பதும் அது சட்டவிரோதமானது என்பதும் அவர்களுக்குத் தெரியாது. ஆனால், ஓமனில் வேலை கிடைக்கும் என்று கருதிச் சென்றார்கள்,” என்றார் வீரமன்.*

*பெண்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கு ஓமானில் ஸ்பொன்சர்கள் இல்லை என்பது தெரிய வந்தது.*

*அபுதாபியில் தங்கி அங்கு பணிபுரிய விருப்பம் தெரிவித்து அபுதாபியில் உள்ள இலங்கை தூதரகத்தில் பெண்கள் கையொப்பமிட்டு கடிதம் அளித்துள்ளதாக வீரமன் தெரிவித்தார்.*

*எவ்வாறாயினும், விசிட் விசாவில் வந்தாலும் பெண்கள் யுஏஇயில் வேலை விசாவிற்கு விண்ணப்பிக்கலாம், அவர்கள் விரும்பினால், பெண்கள் இப்போது வேலை அனுமதி இல்லாமல் ஓமனுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.*

*இதேவேளை, மனித கடத்தல் விவகாரம் தொடர்பில் நேற்று முன் தினபொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸூடன் நாணயக்கார கலந்துரையாடியுள்ளார்.*

*ஆள் கடத்தலை தடுக்கும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*ஆள் கடத்தல் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது. (அ)*

# பொலிஸார் மீது கல் வீச்சு நடத்திய 6 பெண்கள் கைது!

*கொழும்பு, நவ. 18*

*அநுராதபுரம், புபுதுபுர பிரதேசத்தில் பொலிஸார் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்திய 06 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டபோதே பொலிஸார் மீது இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*புபுதுபுர பிரதேசத்தில் நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 14 கிராம் 220 கிராம் ஹெரோயினுடன் 04 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.*


*புபுதுபுர பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வைத்து குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இவ்வாறு கைது செய்யப்பட்ட 04 சந்தேகநபர்களும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டபோது, 06 பெண்கள் பொலிஸாரை கற்களால் தாக்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.*

*சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.*

*ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட 04 சந்தேகநபர்கள் மற்றும் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய 06 பெண்கள் ஆகியோரை அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
முயற்சியில் கவனம் தேவை. செயலில் ஆர்வம் காட்டு வீர்கள். உங்கள் எதிர்பார்ப்பில் இழுபறியான நிலை ஏற்படும். திட்டமிட்டு செயல்பட்டு நன்மை காண்பீர்கள். புதிய முயற்சி இன்று வேண்டாம்.

**இடபம்**
பணிபுரியும் இடத்தில் கவனம் தேவை. செயல்களில் நிதானம் தேவை. அரசு வழியிலான முயற்சிகளில் எதிர்பார்த்த நன்மை இருக்காது. குடும்பத்தினர் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்**
நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். பொன் பொருள் வாங்குவீர்கள். முயற்சி நிறைவேறும். புதிய வேலை எதிர்பார்த்தவர்களுக்கு அழைப்பு வரும். வெளியூர் செல்ல நேரிடும். ஈடுபட்ட செயலில் வெற்றி காண்பீர்கள்.

**கடகம்**
பண விஷயத்தில் கவனம் தேவை. முயற்சி நிறைவேற கடின உழைப்பு தேவை. முயற்சியில் தீவிரம் காட்டு வீர்கள். அலைச்சல் வழியே நினைத்ததை சாதிப் பீர்கள். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்**
முயற்சி நிறைவேறும். பணியாளர்கள் கவனமுடன் செயல்பட வேண்டும். மனதில் குழப்பம் உண்டாகும். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். எதிரி விஷயத்தில் எச்சரிக்கை தேவை.

**கன்னி**
எதிர்பாராத செலவு உண்டாகலாம். தேவையற்ற அலைச்சல் அதிகரிக்கும். குடும்பத்தினரால் பிரச் னையை சந்திப்பீர்கள். வீண் சங்கடங்கள் ஏற்படும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்**
நெருக்கடியில் இருந்து விடுபடுவீர்கள். புதிய சிந்தனை உண்டாகும். எதிர்காலத்திற்குரிய வழியை தேர்வு செய்வீர்கள். புத்திசாலித்தனம் வெளிப்படும். இழுபறி யாக இருந்த முயற்சி நிறைவேறும்.

**விருட்சிகம்**
பணிபுரியும் இடத்தில் செல்வாக்கு உயரும். அதிகாரி களின் பாராட்டிற்கு ஆளாவீர்கள். தொழிலை மாற்றி யமைக்கவோ, விரிவு செய்யவோ முயற்சிப்பீர்கள். லாபம் உண்டாகும். பிள்ளைகளால் நன்மை கிடைக்கும்.

**தனுசு**
இரண்டு நாளாக இருந்த நெருக்கடி விலகும். முயற்சி இன்று நிறைவேறும். அறிவாற்றலால் பிரச்னைகளை எதிர்கொண்டு சமாளிப்பீர்கள். பழைய பிரச்னை ஒன்று தீரும். உறவினர்களின் ஆதரவு உண்டாகும்.

**மகரம்**
எதிர்பார்த்தவற்றில் தடை, தாமதம் உண்டாகும். மனதில் வீண் குழப்பம் ஏற்படும். முயற்சிகளில் சிரமங்களைக் காண்பீர்கள். எதிரியால் பிரச்னைகளை சந்திப்பீர்கள். யோசித்து செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்**
இனிய சம்பவங்களால் மகிழ்வீர்கள். எதிர்பார்த்த ஒன்றை அடைவீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பண வரவு மகிழ்ச்சியை ஏற்படுத்தும். உங்கள் முயற்சி நண்பரின் ஒத்துழைப்புடன் நிறைவேறும்.

**மீனம்**
செயல்களில் விவேகம் இருக்கும். உங்களுக்குண்டான பிரச்னைகளை சரி செய்வீர்கள். சுறுசுறுப்பாக செயல் பட்டு பாராட்டு பெறுவீர்கள். எதிரியால் உண்டான தொல்லை விலகும். தைரியத்துடன் செயல்படுவீர்கள்.

# தி. மு. கவுடன் கூட்டணி அமைக்க கமல் திட்டம்?

சென்னை, நவ. 18

பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தை ஆளும் கட்சி யான தி. மு. கவுடன் கூட் டணி அமைப்பதற்கு கமல் ஹாசன் திட்டமிட்டுள்ளார் என்று மக்கள் நீத மய்யக் கட்சி வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

இதனிடையே, “கூட்டணி அமைப்பது குறித்து தேர்தல் நேரத்தில்தான் முடிவு செய் யப்படும்”, என்று கமல் ஹாசன் ஊடகங்களுக்கு தெரி



வித்துள்ளார்.

கட்சியின் மாவட்டச் செயலாளர்கள், மாநில நிர் வாகிகளுடன் கட்சித் தலை வர் கமல்ஹாசன் கலந்துரை யாடும் கூட்டம் சென்னை யில் நேற்றுமுன்தினம் நடை பெற்றது.

ஆலோசனை கூட்டத்துக்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய கமல்ஹாசன், “பாராளுமன்றத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பது குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசித் தோம். பிற கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது குறித்து தேர்தல் நேரத்தில் தான் முடிவு செய்யப்படும்” என்றார். (ஐ)

# தினகரனுடன் ஒருபோதும் தேர்தல் கூட்டணி அமையாது!

## அ. தி. மு. க. கட்சி அறிவிப்பு

சென்னை, நவ. 18

பாராளுமன்றத் தேர்தலில் தினகரனின் கட்சியுடன் ஒரு போதும் தேர்தல் கூட்டணி அமையாது என்று அ. தி. மு. கவின் இடைக்கால பொதுச் செயலாளர் பழனிசாமி தெரி வித்துள்ளார்.

நேற்று மயிலாடுதுறையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வருகிற பாராளுமன்ற தேர்தலில் அ. தி. மு. க. தலை மையில் மெகா கூட்டணி அமைவது உறுதி. டி.டி.வி. தினகரன் தலைமையிலான அ. ம. மு. கவை எங்கள் கூட் டணியில் இணைக்க ஒரு சத வீதம்கூட வாய்ப்பு இல்லை.

தமிழகத்தில் போதைப் பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கிறது. இதை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண் டும் - என்று கூறினார். (ஐ)

# சிங்களக் கடற்படையினரின் அத்துமீறலுக்கு முடிவில்லையா?

சென்னை, நவ. 18

சிங்களக் கடற்படையின ரின் அத்துமீறலுக்கு முடிவே இல்லையா என அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பி உள்ளார்

அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் கூறியிருப்பதாவது, வங்கக்கடலில் கச்சதீவு அருகே மீன்பிடித்த இராமேஸ் வரம் மீனவர்கள் 14 பேரை அவர்களின் படகுடன் சிங்க ளப் படையினர் கைது செய் துள்ளனர்.

தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி விரட்டிய டித்துள்ளனர். சிங்களப் படையினரின் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

சிங்களக் கடற்படையின ரின் அத்துமீறலை பா.ம.க. தொடர்ந்து கண்டித்து வரு கிறது. மத்திய அரசுக்கு முதலமைச்சர் தொடர்ந்து கடிதம் எழுதி வருகிறார். இராமேஸ்வரம் மீனவர்கள் பல்வேறு கட்ட போராட் டங்களை நடத்தி வருகின்ற னர். இதன் பிறகும் தொடரும் சிங்கள கடற்படையினரின் அத்துமீறலுக்கு முடிவே இல்லையா? மீனவர்கள் கைது விசயத்தில் மத்திய அரசு இனியும் அமைதி காக் கக் கூடாது - என்றுள்ளது. (ஐ)

# விடுதலையான நால்வரையும் இலங்கைக்கு அனுப்பக்கூடாது

## இயக்குநர் கௌதமன்



சென்னை, நவ. 18

ராஜீவ் கொலை வழக்கிலி ருந்து விடுதலை செய்யப்பட்ட இலங்கையர் நால்வரையும் அவர்களின் விருப்பமின்றி இலங்கைக்கு அனுப்பக் கூடாது என்று தமிழ் பேரரசு கட்சி பொதுச் செயலாளரும் இயக்குநருமான கௌதமன்

முருகன், சாந்தன், ரொபேர்ட் பயஸ், ஜெயக் குமார், ரவிச்சந்திரன், நளினி ஆகிய 6 பேரையும் விடுதலை செய்திருப்பது வரவேற்புக்கு ரியது. விடுதலைப் பெற்ற வர்கள் சுதந்திரக் காற்றை சுவாசிப்பதற்குள் அதிலுள்ள நால்வரை மட்டும் தனிமைப் படுத்தி வெளிநாட்டவர்கள் என்று காரணம் கூறி மீண்டும் திருச்சி சிறப்பு முகாமில் பூட்டி சிறை வைத்திருப்ப தென்பது ஒரு கொடூர வன் முறையாகும்.

தமிழக அரசு உடனடியாக அவர்களை திறந்த வெளிக் குள் அனுமதித்து அவர்கள் விரும்புகிற அயல்நாட்டுக்கு செல்வதற்கான ஏற்பாடுகளை விரைந்து செய்ய வேண்டும். நால்வரின் விருப்பம் இல்லா மல் இலங்கைக்கு அனுப்பி னாலும் ஒட்டுமொத்த தமிழர் களின் மிகக் கடுமையான எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டிவரும் - என்று கூறி யுள்ளார். (ஐ)

# ‘தமிழ் சங்கமம்’ தொடங்கி வைக்கிறார் மோடி

புதுடில்லி, நவ. 18

உத்தரப்பிரதேச மாநிலம் வாராணசியில் "காசி தமிழ் சங்கமம்" நிகழ்ச்சியை நவ. 19இல் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.

வாராணசியில் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் ஆம்பிதியேட்டர் மைதானத் தில் இந்த சங்கமம் கோலாக லமாக நடைபெற உள்ளது.

வாராணசிக்கும் தமிழகத் துக்கும் இடையே கலாசார தொடர்புகளைப் புதுப்பிக் கும் நோக்கில் காசி தமிழ்ச் சங்கமம் வாராணசியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒரே நாடு ஒரே அமைப்பு என்ற உணர்வைக் கொண்டா டுவது மற்றும் தமிழ் மொழி மற்றும் கலாசாரத்தை முன்னி லைப்படுத்துவது இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும். (ஐ)

# கனடாவில் இருந்து வந்த குடும்பத்தை நடு வீதியில் இறக்கிவிட்டு பொருட்களுடன் தப்பிய வான் சாரதி!

## யாழ்ப்பாணம் வரும் வேளையில் குருநாகலில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 18

**கனடாவிலிருந்து வந்த குடும்பத்தினரை விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் சென்ற வாகன சாரதி, பெறுமதியான பொருட்களுடன் தலைமறைவாகியுள்ளார்.**

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த போது, குருநாகல் பிரதேசத்துக்கு அண்மையில் மதிய உணவுக்காக வாகனத்தை நிறுத்திய பின்னர், வாகனத்துடன் சாரதி மாயமாகியுள்ளார்.

கனடாவிலிருந்து வந்த குடும்பத்தினர் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் அடங்கிய 9 பயணப் பொதிகளுடன் சாரதி தலைமறைவாகியுள்ளதாக குருநாகல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வழியில், மதிய உணவுக்காக வாகனத்தை நிறுத்தியுள்ளனர். குடும்பத்தினர் சாப்பிடச் செல்லும்போது, சாரதியையும் சாப்பிட வருமாறு அழைத்துள்ளனர். எனினும், சாரதி மறுத்துவிட்டார்.

தான் வாகனத்திலேயே இருப்பதாக தெரிவித்ததையடுத்து, குடும்பத்தினர் ஹோட்டலுக்கு சாப்பிடச் சென்றனர்.

சாப்பிட்ட பின்னர் வெளியில் வந்து பார்த்தபோது, வாகனம் மாயமாகியிருந்தது.

பொலிஸ் முறைப்பாடு செய்த பின்னர், வேறு வாடகை வாகனமொன்றில் அவர்கள் யாழ்ப்பாணம் புறப்பட்டனர். (அ)

# கல்வியியற் கல்லூரி முதலாம் வருட மாணவன் திடீரென்று உயிரிழப்பு

வவுனியா, நவ. 18

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி முதலாம் வருட ஆசிரிய மாணவன் ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளார்.

நேற்று முன் தினம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் முதலாம் வருட ஆசிரிய மாணவன் ஒருவர் காய்ச்சல் காரணமாக தனது விடுதியில் இருந்துள்ளார். தனது சக ஆசிரிய மாணவர்களிடம் உணவு வாங்கி வருமாறு கூறிவிட்டு விடுதியில் படுத்திருந்துள்ளார்.

உணவு வாங்கிக் கொண்டு சக ஆசிரிய மாணவர்கள் அங்கு வந்தபோது காய்ச்சல் காரணமாக குறித்த ஆசிரிய மாணவன் அவதிப்பட்டுள்ளார். இதனையடுத்து உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் அவர் வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னரே மரணமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதில், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி கற்கும் விவசாய பாடப் பிரிவின் முதலாம் வருட ஆசிரிய மாணவனான மட்டக்களப்பு, காரைத்தீவைச் சேர்ந்த ஜிந்துஜன் என்பவரே மரணமடைந்தவராவார். (அ)

# மின்னல் தாக்கத்தால் இவ்வருடம் 12 பேர் பலி!

கொழும்பு, நவ. 18

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் மின்னல் தாக்கங்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியினுள் மின்னல் தாக்கங்களினால் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதில் நான்கு உயிரிழப்புக்கள் இந்த மாதத்தில் பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி கூறினார். (அ)

# வசந்த முதலிகே, சிறிதம்ம தேரரிடம் வாக்குமூலம் பெற நீதிமன்று அனுமதி

கொழும்பு, நவ. 18

தற்போது தடுப்பு உத்தரவின் கீழ் வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரிடம் வாக்குமூலங்களை பெற்றுக் கொள்வதற்காக பொலிஸார் விடுத்த கோரிக்கைக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.



கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி களனி பல்கலைக்கழகத்தில் இருந்து கொழும்பு கோட்டை ஜனாதிபதி செயலகம் வரை பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த பேரணி தொடர்பில் தடுப்பு உத்தரவின் கீழ் தற்போது வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரிடம் வாக்கு மூலங்கள் பெறப்படவேண்டும் என கொம்பனித்தெரு பொலிஸார் நீதிமன்றில் கோரியிருந்தனர்.

அந்த கோரிக்கையை ஆராய்ந்த கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் குறித்த இருவரிடமும் வாக்குமூலங்களை பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. (அ)

# காசல் ஸ்ட்ரீட் மகளிர் வைத்தியசாலையில் இரத்தப் பரிசோதனைகளும் இடைநிறுத்தம்

கொழும்பு, நவ. 18

இரத்தப் பரிசோதனை செய்வதற்குத் தேவையான பொருட்கள் கிடைக்காததால் இலங்கையின் முன்னணி மகளிர் வைத்தியசாலையான காசல் ஸ்ட்ரீட் மகளிர் வைத்தியசாலையில் இரத்தப் பரிசோதனை நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரலாற்றில் முதன்முறையாக மகளிர் மருத்துவமனையில் இரத்த பரிசோதனை செய்யும் பணி முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான கடிதத்தை வைத்தியசாலையின் அனைத்து உள்ளகப் பிரிவுகளுக்கும் வைத்திய சாலைப் பணிப்பாளர் அனுப்பி வைத்துள்ளதாகவும், இதன் காரணமாக கடந்த 14 மற்றும் 15 ஆம் திகதி ஆகிய இரு தினங்களிலும் வைத்தியசாலையில் இரத்த பரிசோதனை மேற் கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வைத்தியசாலையில் தங்கியிருந்த கர்ப்பிணித் தாய்மார்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

எனினும் நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்ட உதவிகள் காரணமாக மீண்டும் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# டயனாவுக்கு எதிரான பயணத் தடை நீடிப்பு

கொழும்பு, நவ. 18

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடையை எதிர்வரும் 15ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, டயனா கமகே சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன, வழக்குக்கு தொடர்பில்லாத வெளி தரப்பினர் வந்து தமது கட்சிக்காரருக்கு எதிராக பயணத்தடை பெற்றுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

வழக்கில் சம்மந்தப்படாத வெளி தரப்பினரால் அவ்வாறான உத்தரவைப் பெற முடியாது என ஜனாதிபதி சட்டத்தரணி தெரிவித்தார்.

எனவே வெளிநாட்டுப் பயணத்திற்கான தடையை நீக்குமாறு நீதிமன்றில் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நியன்சி அரசகுலரத்ன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் நாயகம் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் இந்தக் கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதவான், இந்தக் கோரிக்கை மீதான உத்தரவு எதிர்வரும் 15ஆம் திகதி அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அதுவரை பயணத்தடை நீடிக்கப்படும் எனவும் நீதவான் குறிப்பிட்டார்.

டயனா கமகேவின் கடவுச்சீட்டு, பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை போலியானது என சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் தாக்கல் செய்த முறைப்பாடு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதே இந்த சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டன.

# வாழைப்பழ ஏற்றுமதி ஒப்பந்தம் இரத்தானது!

கொழும்பு, நவ. 18

சீனாவுக்கும், இலங்கைக்கும் இடையில் மாதாந்தம் 2,000 மெற்றிக் தொன் வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வதற்கு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் விவசாயத் திணைக்களத்தின் அலட்சியப் போக்கினால் இரத்தாகியுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில், 150 வாழைச் செய்கை விவசாயிகளின் விவரங்களை சீன அரசாங்கத்திடம் வழங்கி வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, வாரத்திற்கு 500 மெற்றிக் தொன் வாழைப்பழங்கள் வீதம், மாதத்திற்கு 2,000 மெற்றிக் தொன் வாழைப் பழங்களை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டது.

எவ்வாறாயினும், விவசாய அமைச்சு அதில் உரிய அவதானம் செலுத்தாமை காரணமாக வாழை ஏற்றுமதி உடன்படிக்கை இரத்தாகியுள்ளதாக அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார். (அ)

# விவசாய அமைச்சுக்கு புதிய செயலர் நியமனம்

கொழும்பு, நவ. 18

விவசாய அமைச்சின் செயலாளராக குணதாச சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த நியமனம் தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது நியமனம் நவம்பர் 8 முதல் அமுலுக்கு வரும். (அ)

# கல்லுண்டாயில் மரங்கள் நடுகை!



யாழ்ப்பாணம், நவ. 18

வடக்கு மாகாண மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் அலகினால் ஏற்பாடு செய்யப்பட்ட மரம் நடுகை விழா நேற்று வியாழக்கிழமை யாழ். கல்லுண்டாய் பகுதியில் நடைபெற்றது.

இந்த மரம் நடுகை விழாவை விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் மீன்பிடி பிரிவு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

குறித்த மரம் நடுகை நிகழ்வானது வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றது.

இதில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அ)

# அரசியல் தீர்வு பற்றி பேசுவதற்கு இன்னும் என்னதான் இருக்கிறது?

## கேள்வி எழுப்புகிறார் ஸ்ரீ காந்தா



யாழ்ப்பாணம், நவ. 18

"ஒற்றையாட்சி முறையை அகற்றுவது பற்றி சிந்திப்பதற்குக் கூட சிங்களத் தரப்பில் ஆளும் கட்சி உட்பட எந்தக் கட்சியும் தயாராக இல்லை. இந்த நிலைமையில் அரசியல் தீர்வு பற்றி பேசுவதற்கு என்னதான் இருக்கின்றது?"

-இவ்வாறு தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதியும், அவரின் அரசும் வெளிநாடுகளின் கருணையில் ஆட்சியில் நீடிக்கும் நிலையில் தமிழர் தரப்புகளுடன் அரசியல் பேச்சு ஒன்று அவசியமாகவும் அவசரமாகவும் அவர்களுக்குத் தேவைப்படுகின்றது.

அதேநேரத்தில் இனப்பிரச்சினையை உக்கிரமடையச் செய்து, நாட்டைப் பற்றி எரிய வைத்த ஒற்றையாட்சி முறையை அகற்றுவது பற்றி சிந்திப்பதற்குக் கூட சிங்களத் தரப்பில் ஆளும் கட்சி உட்பட எந்தக் கட்சியும் தயாராக இல்லை.

இந்த நிலைமையில் அரசியல் தீர்வு பற்றி பேசுவதற்கு என்னதான் இருக்கின்றது? சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமஷ்டி எனப்படும் இணைப்பாட்சி முறையை உறுதியுடன் வலியுறுத்தி நிற்பதைத் தவிர தமிழ்த் தேசிய தரப்புக்கு இப்போது வேறு தெரிவு எதுவும் கிடையாது.

நீதியான முறையில், விட்டுக்கொடுப்போடு, பிரச்சினையை அணுகுவதற்கு சிங்கள தரப்புகள் முன்வராத வகையில் பிரச்சினை என்பது தொடர்ந்து நீடிக்கவே செய்யும் என்ற செய்தி தமிழர் தரப்பால் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அதற்குரிய சந்தர்ப்பம் இதுவாகும்-என்றுள்ளது. (அ)

# திருச்சி - கொழும்பு இடையிலான புதிய விமான சேவை விரைவில்

கொழும்பு, நவ. 18

குளிர்கால அட்டவணைக்கு பின்னர் திருச்சி-இலங்கை இடையே டிசம்பர் 8ஆம் திகதி முதல் புதிய விமான சேவை தொடங்கப்படவுள்ளது.

திருச்சி விமான நிலையத்திலிருந்து இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, டுபாய், சார்ஜா, குவைத் உள்ளிட்ட நாடுகளுக்கு சர்வதேச விமான போக்குவரத்துகள் நடைபெற்று வருகின்றன. திருச்சி-இலங்கை இடையே தினசரி விமான சேவை இயக்கப்பட்டு வருகிறது. என்றாலும் திருச்சியில் இருந்து இலங்கை வழியாக டுபாய்க்கு, சென்று வரும் பயணிகளின் நலனை கருத்திற்கொண்டு இச்சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தினசரி ஏராளமான பயணிகள் டுபாய்க்கு சென்று வருகின்றனர். ஆனால் இயக்கப்படும் இரு விமானங்களில் போதியளவு இருக்கைகள் கிடைப்பதில்லை. எனவே திருச்சியில் இருந்து, சென்னை வழியாகவோ அல்லது இலங்கை சென்று அங்கிருந்து மாற்று விமானங்கள் மூலமாகவோ டுபாய்க்கு சென்று வருகின்றனர். இதை கருத்தில் கொண்டு திருச்சி-இலங்கை இடையே பிட்ஸ் ஏயார் என்ற இந்த கூடுதல் விமான சேவை அறிமுகம் செய்யப்படுகிறது.

டுபாய் செல்லும் பயணிகள் திருச்சியில் இருந்து இலங்கை சென்று அங்கிருந்து மாற்று விமானங்கள் மூலம் பயணிக்கலாம். அதேபோல் டுபாயிலிருந்து திருச்சி செல்லும் பயணிகளும் இதே வழியில் திருச்சிக்கு செல்லமுடியும்

டிசெம்பர் 8ஆம் திகதி முதல் தொடங்கப்படவுள்ள இந்த புதிய விமான சேவை, வாரத்தில் வியாழன், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இயக்கப்படவுள்ளது.

வியாழக்கிழமை காலை 10:25 மணிக்கு கொழும்புவிலிருந்து புறப்படும் இந்த விமானம் 11:25 மணிக்கு திருச்சியை சென்றடைந்து. மீண்டும் அங்கிருந்து 12:25 மணிக்கு புறப்பட்டு 1:25 மணிக்கு இலங்கையை வந்தடையவுள்ளது.

அத்தோடு சனிக்கிழமை பகல் 12:45 மணிக்கு இலங்கையில் இருந்து புறப்பட்டு 1:45 மணிக்கு திருச்சி சென்று மீண்டும் 2:45 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு பிற்பகல் 3:45 மணிக்கு கொழும்பை வந்தடையும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்படும் இந்த விமானம் 11 மணிக்கு திருச்சியை சென்றடைந்து, மீண்டும் 11:45 மணிக்கு திருச்சியில் இருந்து புறப்பட்டு 12:45 மணிக்கு கொழும்பை வந்தடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கிளி. இந்து வித்தியாலயத்தில் புதிய கட்டடம் நேற்று திறப்பு

கிளிநொச்சி, நவ. 18

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் கீழுள்ள இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் புதிய கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.



வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இரா.வரதீஸ்வரன் நேற்று வியாழக்கிழமை மாணவர்களின் செயற்பாட்டுக்காக இந்தக் கட்டடத்தை திறந்து வைத்தார்.

கொரியா நாட்டின் நிதியில் கொய்க்கா திட்டத்தினூடாக இந்த கட்டடம் அமைக்கப்பட்டது.

இதன்போது மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், கிளிநொச்சி தெற்கு கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். கமல்ராஜா, பாடசாலையின் முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (அ)

# 8 நாடுகளில் போர்ச்சூழலினால் தேயிலை ஏற்றுமதிக்கு ஆபத்து!

## ஐரோப்பிய சந்தையை நோக்கி நகரத் திட்டம்

கொழும்பு, நவ. 18

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் இரசாயன உரத்துக்கு தடை விதித்த முடிவானது தேயிலை உற்பத்தில் துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று பெருந்தோட்டத் துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

"இரசாயன உரத்துக்கு தடை விதித்த தவறான முடிவால் தேயிலை உற்பத்தித் துறையும் பாதிக்கப்பட்டது. இது பற்றி நான் இதுவரை கதைக்கவில்லை. அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவு என்பதால் கூட்டு பொறுப்புக்காக அமைதி காத்தேன். எனினும், எதிர்க்கட்சித் தலைவர் கூறுவதுபோல தேயிலை உற்பத்தி 60 வீதத்தால் வீழ்ச்சியடையவில்லை. 10 முதல் 15 வீதம்வரைதான் வீழ்ச்சியடையும். உரத் தடை தவிர, தேயிலை உற்பத்தியை மேம்படுத்துவதற்கு தேவையான அனைத்துவித நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். ஆகவே தேயிலை உற்பத்தி முற்றாக சரிந்துவிட்டது என்ற கருத்தை ஏற்கமுடியாது. தற்போது உரம் கிடைக்கின்றது. சிறந்த காலநிலை உள்ளது. எனவே, எதிர்காலத்தில் தேயிலை உற்பத்தியும் அதிகரிக்கும்."

- எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

"தேயிலை விலை நூற்றுக்கு 360 சத வீதத்தால் அதிகரித்துள்ளது. இதனால் சிறுதோட்ட உரிமையாளர்களுக்கு சிறந்த வருமானம் கிடைக்கின்றது. சர்வதேச சந்தையிலும் நல்ல விலை கிடைக்கின்றது." - எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேவேளை, இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் சம்பிரதாயபூர்வ பங்காளிகளாக விளங்கும் 10 நாடுகளில் 8 நாடுகளில் குறிப்பாக ரஷ்யா, உக்ரைன், சிரியா, ஈரான், ஈராக் மற்றும் லிபியா போன்ற நாடுகளில் போர்சூழல் நிலவுகின்றது. இது தேயிலை ஏற்றுமதியில் தாக்கம் செலுத்தும்.

எனவே, அமெரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சந்தைகளை நோக்கி நகர வேண்டியுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு தேயிலைச் சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது-என்றார். (அ)

# இரு மாதங்களில் கஞ்சா சட்டபூர்வமாக்கப்படும்!

கொழும்பு, நவ. 18

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் நாட்டில் கஞ்சா நிரந்தரமாக சட்டபூர்வமாக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

கஞ்சாவை ஏற்றுமதி செய்து இலங்கைக்கு அந்நியச் செலாவணியைக் கொண்டு வருவேன் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் சுற்றுலாத்துறை அமைச்சர் டயானா கமகே கருத்து தெரிவித்திருந்த போதிலும், அவருக்கு குறிப்பிட்ட வேலைத்திட்டம் இல்லை என உரையாடலில் கலந்து கொண்ட அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# கனவு உலகுக்கு செல்லும் பட்ஜெட்

## சாடுகின்றது எதிர்க்கட்சி

கொழும்பு, நவ. 18

வரவு-செலவுத் திட்டத்தின் 2404 பில்லியன் ரூபா பற்றாக்குறையை வரி அதிகரிப்பு மற்றும் கடன்களை பெறுவதன் மூலம் சமநிலைப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பட்ஜெட் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நித்திரையின்போது கண்ட ஓர் கனவாகும். மேலும் ஜனாதிபதியின் பட்ஜெட் கனவு உலகிற்கு எடுத்து செல்லுகிறது. அது நடைமுறைக்கு பொருத்தமில்லை என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பட்ஜெட் சர்வதேச நாணய நிதியத்தின் குரல் என்றும் அதனை வெளிப்படுத்து என்பது ஜனாதிபதியின் வாய் மாத்திரமே என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பொய்யான பட்ஜெட் ஒன்றே முன்வைக்கப்பட்டுள்ளது. பட்ஜெட்டில் மொத்த பற்றாக்குறை 2404 பில்லியன்களாகும்.

பற்றாக்குறை என்பது கடன் பெற்றுக் கொள்வதாகும். குறித்த பற்றாக்குறையில் சுமார் 550 முதல் 600 வரையில் வரி வருமானம் பெற்று கொள்ளும் வகையில் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் 2404 பில்லியன் ரூபா பற்றாக்குறையை வரி அதிகரிப்பு மற்றும் கடன்களை பெறுவதன் மூலம் சமநிலைப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அவர்கள் எதிர்பார்க்கும் வகையில் வரி வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாது காரணம் பொருளாதார நெருக்கடிகள் நாட்டில் உக்கிரமடைந்துள்ளன.

நாட்டுக்கு டொலர் கொண்டு வருபவர்கள் ஏற்றுமதியாளர்கள் அவர்களுக்கு நூற்றுக்கு 30 வீதம் தீர்வை அறிவிடப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு நாம் இனங்கப்போவதில்லை. மேலும் 30 வீத வரியினை 15 வீதம் குறைக்கவேண்டும்.

ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்டம் பொய்யான ஒன்றாகும். உதாரணமாக ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துக்கு மருத்துவபீடத்தை ஸ்தாபிப்பதற்காக 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை கொண்டு மருத்துவ பீடத்துக்கான ஒரு கட்டடத்தையேனும் நிர்மாணிக்க முடியுமா?

அவ்வாறு 200 மில்லியன்களுக்குள் கட்டடம் உருவாக்கப்பட்டாலும் மருத்துவ பீடத்திற்கான உபகரணங்கள் எங்கிருந்து பெறுவது? மேலும் வெள்ளப்பெருக்கு அனர்த்தங்களின் போது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு கொலன்னாவ பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 2,300 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இதில் இருந்து பட்ஜெட் எவ்வாறு உள்ளது என்பதனை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது.

ஜனாதிபதியின் பட்ஜெட் நடைமுறைக்கு பொருந்தாது. கனவு உலகிற்கு எடுத்துச் செல்லும் ஒரு பட்ஜெட்டாகும். மேலும் சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் நாட்டின் கடன் மறுசீரமைப்பு உடன்படாமைக்கு காரணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு மக்களாணையின்மையே.

உள்ளூராட்சி மன்றங்கள் 4 வருடங்கள் கடந்துள்ளமையால் பலமின்றி காணப்படுகிறன. இதுவும் முக்கிய காரணமாகும்.

இந்நிலையில் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் செய்ய வேண்டியது பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்கு செல்வதேயாகும்.

இருப்பினும் ஜனாதிபதிக்கு தேர்தலை நடத்துவதற்கு பயம். தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடத்தாமல் பிற்போடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டால் நாம் தேர்தல் ஆணைக்குழுவில் தஞ்சமடைவோம்-என்றார். (அ)

# விவசாயத்தை நவீனப்படுத்த இலங்கை அரசு நடவடிக்கை

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 18

இலங்கையின் விவசாயத்தை நவீனப்படுத்தவும் புதிய விவசாய தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை நிறுவவும் கலிபோர்னியா பல்கலைக்கழக கட்டமைப்புடன், இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நேற்று முன் தினம் நடைபெற்ற, அமெரிக்க - இலங்கை புல்பிரைட் ஆணைக்குழுவின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

உணவைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான வளம் இல்லாத தீவு நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் உணவு வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சிங்கப்பூர் முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடியதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , அதற்குத் தேவையான காணிகளை அடையாளங்கண்டு விவசாயத்தை நவீனமயப்படுத்துமாறு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நவீன விவசாய தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைப்பதன் மூலம் இலங்கையின் விவசாய ஆராய்ச்சித் துறையை எவ்வாறு மேம்படுத்துவது என்பதைக் கண்டறிய பல அமெரிக்க நிறுவனங்களின் ஆதரவைப் பெற எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

விவசாயத் துறையை நவீனமயப்படுத்துவதில் பேராசிரியர் பிரதீபா பண்டாரநாயக்க போன்ற புல்பிரைட் பழைய மாணவர்களின் ஒத்துழைப்பு அவசியமானது என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் பத்து வருடங்களில் ஆங்கில மொழிக் கல்வியை மேம்படுத்த அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

இந்த மாபெரும் திட்டத்தில் ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கு அமெரிக்காவின் ஆதரவைப் பெற எதிர்பார்த்துள்ளதாகவும், புல்பிரைட் புலமைப்பரிசில்கள் மற்றும் உதவிகள் மூலம் இலங்கைக்கு வளவாளர்களை அழைத்துவருவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சன்ங் மற்றும் அமெரிக்காவின் இலங்கை புல்பிரைட் ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சந்தர்ஷி குணவர்தன ஆகியோரும் இங்கு உரையாற்றினர்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த், பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, வயம்ப பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் உதித் ஜயசிங்க, ஜயவர்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சுதந்த லியனகே மற்றும் ருஹுனு பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேன ஆகியோர் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு குறித்து எந்த தீர்மானத்தையும் எடுக்கவில்லை

கொழும்பு, நவ. 18

உள்நாட்டு கடனை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் எந்த தீர்மானத்தையும் எடுக்கவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில், வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பாக வெளித் தரப்பினருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை தொடரவுள்ளதாக அவர் கூறினார்.

எவ்வாறாயினும், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான முன்னைய அறிவிப்புகள் வங்கித்துறை, ஓய்வூதிய நிதி, காப்புறுதித் துறை மற்றும் ஏனைய துறைகளை பாதிக்காது எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# ஹெரோயினுடன் பிக்கு சிக்கினார்!

கொழும்பு, நவ. 18

இங்கிரிய பிரதேச பௌத்த விவகார இணைப்பாளர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டதாக புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 40 மில்லிகிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

புலத்சிங்கள பிரதேசத்தில் உள்ள விகாரைகளில் நடமாடிய திருடர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் சோதனை நடத்தப்பட்டது. ஆனால் நீண்ட விசாரணைகளின் பின்னர் குறித்த பிக்கு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் போதைப்பொருள் வலையமைப்பு தொடர்பான தகவல்களை வெளிக்கொணர நீண்ட நேரம் விசாரணை நடத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

39 வயதான சந்தேக நபர் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப் படவுள்ளார். (அ)

# யானைகள் கணக்கெடுப்பு அடுத்த ஆண்டில் நடக்கும்



கொழும்பு, நவ. 18

2023 ஆம் ஆண்டு இலங்கையில் யானைகள் கணக்கெடுப்பை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய, வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

யானை-மனித மோதலை தடுப்பதற்காக இலங்கையில் தற்போது காணப்படும் காட்டு யானைகளின் எண்ணிக்கை தொடர்பில் திடமான தரவுகள் தேவை என தெரிவித்த அமைச்சர், அடுத்த வருடம் யானைகள் கணக்கெடுப்பு நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

# COP27:

க. சுபகுணம்

# கரிம வாயு மூலம் நடக்கும் ‘லாப’ வர்த்தகம்

## காலநிலை பொருளாதாரத்தில் இதன் பங்கு என்ன?

எகிப்தில் இன்ற நடந்து முடியவுள்ள 27ஆம் காலநிலை மாநாட்டில், அமெரிக்கா ஒரு புதிய கரிம வர்த்தக திட்டத்தை வெளியிட்டது. வளரும் நாடுகளின் தூய ஆற்றல் திட்டங்களில் தனியார் முதலீடுகளைப் பெருக்குவதே அதன் நோக்கமாகச் சொல்லப்பட்டது.

நீண்டகால பார்வையில், ஏழை நாடுகள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்திக்கு மாறுவது, காலநிலை தாக்கங்களுக்கான தாங்கு திறனை அதிகரிப்பது ஆகியவற்றுக்கு வழிவகுக்கலாம் என்பதே அதன் நோக்கம்.

இந்த திட்டத்தில், நைஜீரியாவும் சிலியும் ஆர்வம் காட்டியுள்ளன. கரிம சந்தை என்ற வர்த்தக அமைப்புக்குள் நுழைவது குறித்து இந்தியா கடந்த ஆகஸ்ட் மாதம் ஆற்றல் தொடர்பான மசோதாவிலேயே பேசியிருந்தது. ஆபிரிக்க நாடுகளில் சில இத்தகைய முன்னெடுப்பை எடுத்துள்ளன.

காலநிலை நிதி, ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள நாடுகளின் பொருளாதாரங்களை ஆதரிக்கும் வகையில், கரிம கிரெடிட்களை விற்பனைக்கு வைக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

பசுமை இல்ல வாயு வெளியீட்டுக்கு விலை நிர்ணயித்து அதை ஒரு பண்டமாக மாற்றுவதே கரிம சந்தை. கரிம வர்த்தகத்தில் மிகப்பெரிய பயனாளியாக மாறும் வாய்ப்பு இந்தியாவுக்கு உள்ளதாகச் சொல்லப்படுகிறது. இந்தியா, 2.5 முதல் 3 பில்லியன் டன் வரையிலான கரிம தேக்கத்தை உருவாக்குவதாக தேசியளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளில் தெரிவித்துள்ளது.

**கரிம வர்த்தகம் என்றால் என்ன?**

கரிம சந்தை என்பது புதிய முறையா என்று பார்த்தால் இல்லை. இது 1997ஆம் ஆண்டில் காலநிலை மாற்றம் குறித்த ஐ.நாவின் கியோட்டோ உடன்படிக்கையில் தொடங்கியது.

வளர்ந்த நாடுகளின் குழு தங்கள் பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைப்பதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும் உறுதியளித்தனர். அப்போது, தூய மேம்பாட்டு முறையை உருவாக்க கரிம சந்தை வழிவகுத்தது. இது கட்டாய உமிழ்வு குறைப்பு இலக்குகளைப் பூர்த்தி செய்யத் தவறிய நாடுகளை வளரும் நாடுகளில் உமிழ்வு குறைப்பு திட்டங்களுக்காக நிதியளிக்கவும் அங்கு கிரகிக்கப்பட்ட கரிமத்தைக் கோருவதற்கும் வழிவகுத்தது.

“கியோட்டோ உடன்படிக்கை தான் இதற்கான தொடக்கம். ஒரு குறிப்பிட்ட நாடு கரிம வாயுக்களை வெளியிடாமல் இருக்கலாம். ஆனால், மற்ற நாடுகள் ஏற்படுத்தும் மாசு மொத்த பூமியின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

உலக நாடுகள் மேற்கொண்டு மாசுபடுத்துவதைக் குறைத்து, கட்டுப்படுத்துவதே இதன் நோக்கம். அதற்காக ஒரு குறிப்பிட்ட அளவுக்கு கரிம உமிழ்வைக் குறைக்குமாறு உலக நாடுகள் வலியுறுத்தப்படுகின்றன.

அதை உடனடியாகச் செய்ய முடியாது என்பதால் ஆண்டுவாரியாக அதற்கான இலக்குகள் நிர்ணயிக் கப்படுகின்றன. ஒரு தரப்பினால் குறிப்பிட்ட இலக்கை அடையும் அளவுக்கு கரிம உமிழ்வைக் குறைக்க முடியவில்லை.

ஆனால், இன்னொரு தரப்பு குறைக்க வேண்டிய அளவைவிட அதிகமாகவே குறைத்திருந்தால், கரிம உமிழ்வைக் குறைக்காத தரப்பு, தன் ஒழுங்குமுறை அளவைத் தாண்டி குறைத்துள்ளவர்களிடம் கரிமத்தை கிரெடிட்டாக வாங்கிக் கொண்டு, தானும் குறைத்துவிட்டதாகக் கணக்கு காட்டலாம்,” என்கிறார் பொருளாதார வல்லுநர் வ.நாகப்பன்.

2005ஆம் ஆண்டு ஜனவரியில், ஐரோப்பிய ஒன்றியம் உலகின் முதல் சர்வதேச உமிழ்வு வர்த்தக அமைப்பை (Emission Trading System) அறிமுகப்படுத்தியது. சீனா 2021இல் உலகின் மிகப்பெரிய உமிழ்வு வர்த்தக அமைப்பை அறிமுகப்படுத்தியது. புதைபடிவ எரிபொருட்களை எரிப்பதால் ஏற்படும் உலகளாவிய கரிம உமிழ்வில் ஏழில் ஒரு பங்கை இது உள்ளடக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.




இந்தியாவும், அதன் சமீபத்திய ஆற்றல் மசோதாவில், கரிம கிரெடிட் வர்த்தக திட்டத்தை உருவாக்குவது குறித்துப் பேசியுள்ளது. மாசுபடுத்துபவர்கள் குறிப்பிட்ட அளவு உமிழ்வுகளுக்குச் சமமான கிரெடிட்களை பரிமாற்றிக்கொள்ள முடியும்.

கரிம சந்தை முதலில் தன்னார்வமாக இருக்கவுள்ளது. ஆனால், அதில் ஒரு கட்டாய வர்த்தக அமைப்பை அறிமுகப்படுத்துவதற்கான திட்டங்கள் உள்ளன.

**கரிம உமிழ்வைக் குறைப்பதற்கான பொருளாதார ஊக்கம்**

இது நாட்டின் அனைத்து மூலைகளிலும் இருக்கும் தொழில்முனைவோர்களுக்குப் பலனளிக்குமா என்ற கேள்வி ஒருபுறம் எழுகிறது.

அதேவேளையில், குறைந்த கரிமத்தை வெளியிட்டு தங்களிடம் மீதமிருக்கும் கரிம வெளியீட்டிற்கான அளவை கரிம வர்த்தகத்தில் விற்பனை செய்யும் போது, அதைப் பெற்றுக்கொண்டு அந்த அளவையும் அதிக கரிம வெளியீட்டை மேற்கொள்ளும் நிறுவனங்கள் வெளியிடுவதற்கான வாய்ப்புகள் உள்ளதா என்ற கேள்வியும் எழுகிறது.



**ஒப்புதலுக்கு வராத உலக நாடுகள்**

எகிப்தில் 27வது காலநிலை மாநாட்டில் நடந்த பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, கரிம கிரெடிட்களில் உலகளாவிய வர்த்தகத்தை மேற்கொள்வது குறித்த விவரங்கள் மற்றும் விதிமுறைகளில் உலக நாடுகள் ஓர் உடன்பாட்டுக்கு வரவில்லை என்று ராய்ட்டர்ஸ் செய்தி முகமை தெரிவித்துள்ளது.

பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைப்பதற்காக மற்ற நாடுகளுக்கு அல்லது நிறுவனங்களுக்குப் பணம் செலுத்த கரிம பதிலீடுகள் (Carbon offset) அனுமதிக்கின்றன. நிறுவனங்கள் ஏற்கெனவே தனியார் சந்தைகளில் கரிம பதிலீட்டு கிரெடிட்களை வர்த்தகம் செய்துகொண்டிருக்கின்றன. இந்நிலையில், அத்தகைய கிரெடிட்களை வாங்குவதன் மூலம் நாடுகள் தங்கள் தேசிய காலநிலை இலக்குகளை ஓரளவுக்கு அடைய உதவக்கூடும் விதிகளை நிர்ணயிக்க பாரிஸ் ஒப்பந்தத்தின் பிரிவு 6 வழி செய்யலாம்.

உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய சர்வதேச அளவிலான விதிகள், கரிம வெளியீட்டைக் குறைக்கும் திட்டங்களை உருவாக்க உதவலாம் என்று நம்பப்பட்டது.

ஆனால் உலக நாடுகள் அதற்கான விதிமுறைகள் எப்படியிருக்க வேண்டும், எத்தகைய திட்டங்கள் அதற்கு ஏற்புடையவை, அவை நடைமுறையில் நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை எப்படி உறுதி செய்வது என்பனவற்றை வரையறுப்பதில் ஓர் ஒப்புதலுக்கு இன்னும் வராமலே இருக்கின்றன.

**கரிம வர்த்தகம் ஆபத்தானதா?**

ஒரு நிறுவனம் 100 டன் கரிமத்தை வெளியிடுகிறது. அதில், 40 டன் கரிமத்தைக் கிரகிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமோ அல்லது வேறு ஏதேனும் தொழில்நுட்ப புதுமையின் மூலம் கரிம வெளியீட்டில் 40 டன்னை குறைத்தோ, தனது உமிழ்வை பதிலீடு செய்கிறது.

இன்னொருபுறம் ஒரு நிறுவனம் 200 டன் கரிமத்தை வெளியிடுகிறார். ஆனால், அது 120 டன்களை வெளியிட வேண்டும் என்று ஒழுங்குமுறை விதிகள் கூறுகின்றன. இப்போது முந்தைய நிறுவனத்தைப் போன்ற இரண்டு நிறுவனங்களிடம் சேர்த்து 80 டன் கிரகித்து வைத்த கரிமத்தைப் பணம் கொடுத்து பெற்றுக்கொள்கிறார்.

ஆக, இந்த இடத்தில் அவர் பணம் கொடுத்து பெற்றுக்கொண்ட கரிம அளவை அவர் வெளியிடலாம். ஏனெனில், அவர் வெளியிடப்போகும் 80 டன் கரிமத்திற்கு ஈடாக முன்பே கரிம கிரகிப்பு நடவடிக்கைக்குச் செலவழித்துவிட்டார்.

இதில், “ஒரு சந்தையில் விநியோகிப்பவரும் அதைக் கேட்டு வாங்குபவரும் இருப்பார்கள். ஒருவருக்கு கிரகித்து வைக்கப்பட்டுள்ள கரிமத்தின் தேவை ஏன் ஏற்படுகிறது என்பதற்கு அது சரியானது. ஆனால் விநியோகிப்பவராக இருப்பவர்களுக்கு 40 டன் கரிம வாயுவை கிரகித்து வைக்கும் வேலையை மேற்கொள் வதற்கான இடம் வேண்டும். இத்தகைய நிலத்தை ஏற்பாடு செய்வதற்கு அவர்கள் மக்களிடம் தான் செல்வார்கள்.

இது நிலத்தில் மட்டுமல்ல, கடல் பகுதியிலும் நடக்கலாம். கடல் பகுதியில் நிலத்தைவிடப் பல மடங்கு அதிகமாக கரிம கிரகிப்பு செயல்முறை நடக்கும். அப்படியிருக்கையில், அதை வைத்து எத்தனை நிறுவனங்களிடம் கிரகித்து வைக்கப்பட்ட கரிம அளவைப் பிரித்து விற்பனை செய்யமுடியும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

இதன்மூலம் ஒரு புதிய சந்தையை உருவாக்குகிறார்கள். இதில் அரசுகள் மட்டுமின்றி தனியார் நிறுவனங்களும் ஈடுபட முடியும். சான்றாக இந்தியாவில் 24 சதவீதம் காட்டுப்பகுதி உள்ளது. அதில், பலவும் டன் கணக்கிலான கரிமத்தை கிரகிக்கின்றன.

அதை நிறுவனங்களுக்குப் பிரித்துக் கொடுத்து, உமிழ்வு வர்த்தக அமைப்பின் மூலம் வர்த்தகம் செய்யலாம். இது புவி வெப்பமயமாதலை விரைவுபடுத்தும் பசுமை இல்ல வாயுக்களையும் ஒருவித விற்பனைப் பண்டமாக்குகிறது.

இதனால் கரிம வெளியீட்டில் பெரிய தாக்கம் இருப்பதைவிட, நில மற்றும் கடல் அபகரிப்பு பெரியளவில் இருக்கும்,” என்று கூறுகிறார் நீலப் பொருளாதாரம் குறித்து ஆய்வு செய்துள்ள வல்லுநர் சிறிதர்.

இந்த வர்த்தக முறையைப் பயன்படுத்தி, பெரியளவில் கரிம உமிழ்வை மேற்கொள்ளும் நிறுவனங்கள் தங்கள் உமிழ்வை ஒழுங்குபடுத்திய நிறுவனங்களிடம் இருந்து கரிம கொடுப்பனவுகளை வாங்குவதற்கும் அதன் மூலம் உமிழ்வை ஒழுங்குபடுத்துவதில் இருந்து தப்பிப்பதற்கும் இந்த வர்த்தக முறை வாய்ப்பளிக்கிறதா எனக் கேட்டபோது, “சில நிறுவனங்கள் கரிம கிரெடிட்களை வாங்க முடியும். எனவே உமிழ்வுக்கான வரம்புகள் அவ்வப்போது இறுக்கப்படாவிட்டால், கரிம உமிழ்வைத் தொடர்ந்து மெற்கொள்ளப் பணம் செலுத்த முடியும். இந்த இடத்தில் பசுமை இல்ல வாயு வெளியீட்டிற்கான உமிழ்வு வரம்புகள் எப்படியிருக்கும் என்ற கேள்வி எழுகிறது.

அவை நிலையானதாக இருந்தால் சரி. அப்படியில்லாமல், உமிழ்வின் தீவிரத்தை அடிப்படையாகக் கொண்டது என்றால், சீனாவில் உமிழ்வு வர்த்தக அமைப்பைப் போல தீவிர வரம்பு இறுக்கப்பட்டாலும்கூட, நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியை அதிகரித்தால் காலப்போக்கில் உமிழ்வு வரம்புகளும் தொடர்ந்து அதிகரிக்கக்கூடும்,” என்றார். **(பிபிசி)**

## இலங்கையின் பொருளாதார நோயை சமாளிக்கும் ரணில் அரசபொருளியல்



அ. வரதராஜா பெருமாள்

பகுதி 4

# அரசு சார்ந்தோர்க்கு தாராளங்கள் மக்கள் முதுகில் ஏற்றும் சுமைகள்

*12.* தாராளவாத பொருளாதாரக் கொள்கையானது, உற்பத்திகளும், விற்பனைகளும், ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும், விநியோகங்களும் கொள்வனவுகளும் முழுக்க முழுக்க சந்தை செயற்பாடுகளால் நடைபெற வேண்டுமே தவிர அரசின் செயற்பாடுகளோ தலையீடுகளோ அதில் இருக்கக் கூடாது என்கிறது. இதனை சொல்லித்தான் 1977ல் ஜே.ஆர். ஜெயவர்த்தனா திறந்த பொருளாதாரக் கொள்கையை இலங்கையில் நடைமுறைப்படுத்தினார். ஆனால், பரந்துபட்ட பொது மக்களின் நலன் கருதியும், பொருளாதாரரீதியில் பலயீனமான நிலையில் இருக்கும் மக்களின் நலன் கருதியும் அரசாங்கம் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற துறைகளிலும், அடிப்படையான உற்பத்தித் தொழிற் துறைகளின் அபிவிருத்தியிலும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் மிகப்பிரதானமானவை எனவும், அத்துடன் சமூக பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான பொருளாதார விடயங்களில் அரசாங்கமே பொறுப்போடு செயற்பட வேண்டும் எனவும், மேலும் தொழிலாளர் பாதுகாப்பு, அவர்களுக்கான அடிப்படை உரிமைகளை உத்தரவாதம் செய்தல், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, போன்ற விடயங்களை கவனிப்பது அரசாங்கத்தின் கடமை எனவும் வலியுறுத்தப்படுவதை அனைத்து நாடுகளிலும் காணலாம்.

நவதாராளவாதியான ரணில் அவர்கள் 2015ம் ஆண்டு பிரதமரான போது தமது பொருளாதார கொள்கையானது சமூகம் சார் சந்தைப் பொருளாதாரக் கொள்கை என்றார். இப்போது ஜனாதிபதியாக ஆன போதும் அதனையே கூறுகிறார். ஆனால் அதன் முழுமையான உள்ளடக்கங்கள் என்ன, அதன் உண்மையான அர்த்தம் என்னவென்று இன்னமும் அவர் தெரிவிக்கவில்லை. அவர் அந்நியச் செலாவணி நெருக்கடி நிலைமையின் காரணமாக இறக்குமதிகளை அவசியங்களின் அடிப்படையில் கட்டுப்பாடாக மேற்கொள்வதற்கு லைசன்ஸ் மற்றும் பெர்மிட் முறையை அறிவித்திருக்கிறார். இன்றைய நிலையில் இறக்குமதிகளை கட்டுப்பாடாக அனுமதிப்பதுவும் முறைப்படுத்துவதுவும் தவிர்க்க முடியாததெனினும் அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது முக்கியமானதாகும். அதற்கு சட்டபூர்வமானதும் வெளிப்படையானதுமான ஒரு பொறி முறையை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதே சரியாகும். ஜனாதிபதி அறிவித்திருக்கும் முறையானது லைசன்ஸ் அல்லது பெர்மிட் ராஜ்யம் ஒன்றினை ஆக்கும் முயற்சியையே காட்டுகிறது. இது லஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகளையே பெருக்கும். ஏற்கனவே ஏற்றுமதிகளிலும், இறக்குமதிகளிலும் துறைமுகங்களிலும் வியாபார மற்றும் முகவர் மாபியாக்கள் நிறைந்துள்ளன. அறிமுகப்படுத்தப்பட்டுள்ள லைசன்ஸ் மற்றும் பெர்மிட் முறையானது அரசாங்கத்தின் ஆதரவாளர்களாக உள்ள வர்த்தகர்களுக்கு வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதாகவே அமையும் என்பதோடு லஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகள் மேலும் பல மடங்காக அதிகரிப்பதற்குமே வழிவகுக்கும். அத்துடன் இறக்குமதியாளர்கள் தமது விருப்பத்திற்கேற்ப பொருட்களின் விலைகளை கட்டுப்பாடற்ற ரீதியில் உயர்த்தி கொள்ளை லாபம் சம்பாதிப்பதற்கும் ஊக்கம் அளிக்கும்.

*13.* பொருட்களின் வியாபாரங்கள் தொகைரீதியாக மிகவும் குறைந்திருந்தாலும் வர்த்தகர்களின் இலாப உழைப்பு குறைந்திருக்க வாய்ப்பே இல்லை என சந்தை நிலவரங்களோடு தொடர்புபட்டிருக்கும் அவதானிகள் தெரிவிக்கின்றனர். ஏனென்றால், அவர்களுக்கு விலைக் கட்டுப்பாடு என்று எதுவும் இல்லை. வர்த்தகர்கள் அன்றன்றைக்கு எந்த விலைக்கு எந்தப் பொருளை விற்றால் வியாபாரமாகும் என கருதுகிறார்களே அந்த விலைக்கே வியாபாரங்கள் நடக்கின்றன. இந்த விடயத்தில் வியாபாரிகளுக்கிடையில் ரகசியக் கூட்டுகள் செயற்படுகின்றன என்றே தெரிகிறது. அரசாங்கம் கட்டுப்பாட்டு விலை என்று சிலவற்றிற்கு அறிவித்திருந்தாலும் அந்த விலைகளில் வியாபாரங்கள் நடைபெறுவதில்லை. நுகர்வோரின் நலன்களை சட்டப்படி பாதுகாக்க வேண்டிய நுகர்வோர் அதிகார சபை என்ற ஒன்று செயற்பாட்டில் இல்லை எனும் வகையான ஒரு நிலைமை காணப்படுகின்றது. அதனால் பொருட்களின் விற்பனை விலை தொடர்பாக வியாபாரிகளுக்கு எந்தவொரு நெருக்குதலோ கட்டாயமோ இல்லை என்னும் வகையாக அரசாங்கம் வர்த்தகர்கள் விடயத்தில் மிகத் தாராளமாகவே நடந்து கொள்கிறது. இந்த தாராளங்களுக்கு மாற்றுப் பரிசுகளாக லஞ்சங்களும் ஊழல் மோசடிகளும் பல்வேறு அரச மட்டங்களிலும் நடைபெறுகின்றன என்பதனை புரிந்து கொள்வதொன்றும் சிரமமில்லை. ஆனால் அவை எங்கெங்கே என்னென்ன அளவில் எந்தெந்த அரசாங்க பிரிவினரோடு நடைபெறுகின்றன என்று அக்கறை கொண்டுள்ள சமூக அவதானிகளால் கூட தெரிந்து கொள்ள முடியவில்லை. அந்தளவுக்கு அவை உயர்மட்ட விவகாரங்களாக உள்ளன. இவை தொடர்பாக சமூக நிறுவனங்களால் எதுவும் செய்ய முடியாத ஒரு நிலைமையே இங்கு உள்ளது.

### 2022ல் 3 தடவைகள் நிதி அறிக்கைகள் 2023க்கும் அதே கெதியோ!

*14.* நிதி அமைச்சராகவும் இருக்கின்ற ஜனாதிபதி கடந்த ஆகஸ்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த 2022ம் ஆண்டுக்கான குறை நிரப்பு நிதி அறிக்கையில் இந்த வருடம் முழுவதுக்குமான அரச செலவு 4,42,700 கோடி ரூபாக்களாக இருக்கும் என்றும், அரசாங்கத்தின் வருமானம் 2,10,000 கோடிகளாக இருக்கும் என்றும் மிகுதி சுமார் 2,35,000 கோடி ரூபாக்களை உள்நாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்தும், திறைசேரி உறுதிப் பத்திரங்களை வழங்கியும், மத்திய வங்கியிடமிருந்தும், மற்றும் வெளிநாடுகளிடமிருந்தும் கடனாகப் பெறுவதாகவும் கணக்குக் காட்டியிருக்கிறார். ஆனால் அவ்வளவுக்கு வருமானமும் வராது: அவ்வளவுக்கு கடனும் பெற முடியாது. இனி அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதமளவில் மத்திய வங்கியினால் வெளியிடப்படும் ஆண்டறிக்கை வரும் பொழுதே முழு உண்மைகளும் தெரிய வரும். புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள மறைமுக வரிகளையும் சரி, வருமான வரிகளையும் சரி அறிவித்துள்ள அளவுக்கு அறவிடுவதற்கு இன்னமும் தொடங்கவே இல்லை. அதேவேளை, அரசாங்கம் செலவிட உள்ளதாக கூறிய சில சமூக பாதுகாப்பு செலவுகள் இன்னமும் நடைபெறவில்லை.



அரசாங்கம் எதிர்பார்த்துள்ள அளவுக்கு இந்த ஆண்டுக்கான வருமானம் கிடைக்கப் போவதில்லை என்பதோடு, வெளிநாட்டுக் கடன்களுக்காக இந்த ஆண்டு கொடுக்க வேண்டிய வட்டியையும், இந்த ஆண்டு திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் முதலையும் திருப்பிச் செலுத்துவதற்கும், அத்தியாவசியமான இறக்குமதிகளுக்கும் தேவையான அந்நியச் செலாவணிக்காகவும் வெளிநாட்டுக் கடன்களைப் பெற முடியாத நிலையில் இருக்கிற அரசாங்கம், தனது வரவு செலவுத் திட்ட பற்றாக் குறையை ஈடுகட்ட யாரிடமிருந்து வெளிநாட்டுக் கடனைப் பெறப் போகிறது? உள் நாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து போதிய அளவுக்கு கடன் பெறுவதற்கான வாய்ப்பும் மிக மிகக் குறைந்ததாகி விட்டது. அரசின் திறைசேரி பத்திரங்கள் மீது முதலிடுவோரும் அரசின் மீது நம்பிக்கை இழந்த நிலையில் உள்ளனர். உள்நாட்டில் பெற்ற கடன் தொகை ஏற்கனவே 12 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா வைத் தாண்டி விட்டது. வட்டித் தொகையாக இந்த ஆண்டு அரசாங்கம் செலுத்த வேண்டிய பண அளவு சுமார் 1 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாக்களாகும். இந்த நிலையில் பண நோட்டுகளை அச்சடிப்பதனை அரசாங்கம் தொடர்ந்து மேற்கொள்வது தவிர்க்க முடியாததாகும்.

இந்த ஆண்டு துண்டு விழுந்துள்ள பற்றாக்குறையை சமாளிக்க சத்தமெதுவுமின்றி 90 ஆயிரம் கோடி ரூபாக்களுக்கு மேல் அச்சடித்து விட்டார்கள். ராஜபக்சாக்களின் ஆட்சி 2020 ஜனவரி தொடக்கம் 2022ம் ஆண்டு மார்ச் வரையான காலகட்டத்தில் சுமார் இரண்டு லட்சம் கோடி ரூபாக்கள் பணத்தை அச்சடித்தனர். மத்திய வங்கியின் புதிய ஆளுநராக நந்தலால் வீரசிங்க அவர்கள் பதவியேற்று 6 மாதத்தில் சுமார் 70000 கோடி ரூபாக்களை அச்சடித்து விட்டதாக பொருளியல் நிபுணர்கள் கணக்கொன்றை வெளியிட்டுள்ளனர். அடுத்த ஆண்டு அரசாங்கம் கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் கோடி அளவுக்கு பணத்தை அச்சடிக்கும் போலத் தெரிகிறது. ஆக மொத்தத்தில் பொருட்களின் விலையேற்றமும் பணப் பெறுமதியின் இறக்கமும் ஒரு தொடர் கதைதான் என்பது நிச்சயமாகிறது.

### வளர் நெருப்பாய் உயரும் வட்டிக் கடன்

*15.* இலங்கை இந்த ஆண்டு வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய சுமார் 6 பில்லியன் டொலர்களில் ஒரு சிறு தொகை மட்டுமே கொடுக்கப்பட்டது. கடந்த மார்ச் மாதம் அரசு இலங்கையை வங்குரோத்து நாடு என அறிவித்ததைத் தொடர்ந்து இந்த ஆண்டுக்கு வட்டியாகவும் திருப்பிச் செலுத்த வேண்டிய முதலாகவும் கொடுக்க வேண்டியவற்றை கொடுக்க வில்லை. மார்ச் மாத முடிவில் இலங் கையின் மொத்த வெளிநாட்டுக்கடன் கிட்டத் தட்ட 50 பில்லியன் டொலர்க ளாகும். இந்த ஆண்டு முடிவில் இத் தொகை 55 பில்லியின் டொலர்களைத் தாண்டி விடும். சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்தால் இந்தியா, யப்பான் மற்றும் மேலைத் தேச நாடுகள் அடுத்த ஆண்டு ஓரளவு கடன் கொடுக்கக் கூடும். அதற்கும் இந்த நாடுகள் ஏற்கனவே கொடுத்த கடன்கள் தொடர்பாக ஒரு திருப்தியான மறுசீரமைப்பு உடன்பாடு ஏற்பட வேண்டும். அது இன்னமும் நடைபெறவில்லை. இதனால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கூட இவ்வாண்டு கிடைப்பதற்கு வாய்ப்பில்லை.



சீனாவோ தனக்கு தர வேண்டிய வட்டியையும் இந்த ஆண்டு திருப்பிச் செலுத்த வேண்டிய முதலுக்காகவும் கிட்டத்தட்ட 2 பில்லியன் டொலர்களை இலங்கைக்கு புதிய கடனாக தரத் தயாராக இருக்கிறது. ஆனால் இதன் மூலம் இலங்கைக்கு அந்நியச் செலாவணியாக பணம் எதுவும் வரமாட்டாது. புத்தகத்தில் பழைய கடன் அழிக்கப்பட்டு புதிய கடனாக எழுதப்படும். இந்தப் புதிய கடனை என்ன வட்டியில் பெற வேண்டி இருக்குமோ என்ற பிரச்சினையும் அத்தோடு இது சீனாவுக்குக் கொடுக்க வேண்டிய மொத்தக் கடனை மேலும் அதிகரிக்கும் என்பதனாலும், அரசாங்கம் இது தொடர்பாக வாயே திறக்காமல் இருக்கின்றது. சீனாவுக்கான கடன் தொடர்பான மறுசீரமைப்புத் திட்டம் இந்த நிலையில் இருக்க. இந்தியா எவற்றிற்கு உடன்படும் என்பது இன்னமும் வெளிவரவில்லை. இந்த நிலையில் அடுத்த ஆண்டு வெளி நாட்டுக் கடன்கள் தொடர்பாக இலங்கை பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க உள் ளதே தவிர ஒரு கணிசமான அளவுக்குக் கூட வெளிநாடுகளிடமிருந்து கடன் வாங்கக் கூடிய எந்த நிலைமையையும் இதுவரை காணவில்லை. இது பற்றி மக்கள் எதுவுமே அறிந்து விடாதபடி அரசாங்கம் எல்லாவற்றையும் கமுக்கமாக அமுக்கி வைத்திருப்பதில் மிகவும் கெட்டித் தனமாகவே செயற்படுகிறது. **(பகுதி 5ல் தொடரும்)**

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1) 
2) 
3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |

**60.** **பொருத்தமான வாக்கியங்கள்**

## கல்வி tv CHANNEL-1

**18.11.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**18.11.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நீர் நிலை ஒன்றிலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு



மட்டக்களப்பு, நவ. 18

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப்பிரதேசத்திற்குட்பட்ட பட்டாபுரம் கிராமத்தில் உள்ள நீர் நிலை ஒன்றிலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று முன் தினம் மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பட்டாபுரம் கிராமத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கடந்த 14 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயிருந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடந்த புதன் கிழமை அக்கிராமத்திலுள்ள நீர் நிலையில் சடலம் ஒன்று தென்படுவதாக அதனை அவதானித்தவர்கள் தெரிவித்ததையடுத்து, அங்கு விரைந்த களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததோடு சடலத்த மீட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மனநலம் குன்றியவர் எனவும் பட்டாபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுதாகசன் சூரியகுமார் எனவும் அடையாளர் காணப்பட்டுள்ளார். (அ)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக பாயிஸ் முஸ்தபா



நிந்தவூர், நவ. 18

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக இலங்கையின் முன்னணி ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐந்து வருட காலத்திற்கென இந்த வேந்தர் பதவி நியமனத்தை வழங்கியுள்ளார்.

இலங்கையின் பிரபல சட்ட மேதையான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, இலங்கைக்கான பிரிட்டன் தூதுவராகவும் ஏற்கனவே இருந்துள்ளார்.

இந்நிலையில் புதிய வேந்தராக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா நியமிக்கப்பட்டுள்ளார். (அ-06)

# சுயநலமான அரசியலை கைவிடவேண்டும் ரெலோ

## இப்படிக் கோருகிறார் சாணக்கியன் எம்.பி.

மட்டக்களப்பு, நவ. 18

**அண்மையில் ரெலோவின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மிக மோசமான முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சித்திருந்தார்.இவை மிகவும் கவலையான விடயங்கள். இவர்கள் சுயநல அரசியலை விடுத்து தமிழ் சமூகத்திற்காக அரசியல் செய்ய பழகவேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திராய்மடு மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து மின்னொளி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கலந்துகொண்டு மின்னொளி உபகரணங்களை பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் வழங்கினார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டம் சமஷ்டியை தீர்வாக ஏற்றுக்கொள்ளும் கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டமாகவே நடைபெற்றது. இதில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. நான் இன்னும் கட்சித் தலைவராக வரவில்லை. அந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் சம்பந்தனும் மட்டுமே சமுகமளித்திருந்தனர். பலர் அந்த சந்திப்புக்கு வருவதாக சொல்லியிருந்தாலும் அந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.அவர்கள் சமஷ்டி முறையை ஏற்றுக் கொள்ளாத கட்சிகளா என்பது எனக்கு தெரியாது.அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் என்றால் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரின் கருத்தை மதித்து வந்திருக்கவேண்டும்.

அண்மையில் ரெலோவின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மிக மோசமான முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சித்திருந்தார். இவை மிகவும் கவலையான விடயங்கள். இவர்கள் சுயநல அரசியலை விடுத்து தமிழ் சமூகத்திற்காக அரசியல் செய்ய பழகவேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவா எதிர்ப்பா என்பது தொடர்பில் எங்களது பாராளுமன்றக் குழு கூடி தீர்மானத்தை எடுக்கும்.

இந்த வரவு-செலவுத் திட்டம் மிகவும் கவலைக்குரியதாகவுள்ளது-என்றார். (அ)

# மக்களின் பொறுப்பற்ற செயல்பாட்டால் எரிவாயுத் தட்டுப்பாட்டு ஏற்படுகின்றது



கல்முனை, நவ. 18

எரிவாயு தட்டுப்பாடு மக்களின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் ஏற்படுவதாக கல்முனை பிராந்திய எரிவாயு முகவர் உயரதிகாரி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்தில் உள்ள பெரிய நீலாவணை, மருதமுனை, மணல்சேனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, சேனைக்குடியிருப்பு, நாவிதன்வெளி, சொறிக்கல்முனை, சம்மாந்துறை உள்ளிட்ட பகுதி களில் சடுதியாக எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் பரவியிருந்தன.

இதனை தொடர்ந்து எரிவாயு களஞ்சியப்படுத்தப்படும் பிரதான முகவர் நிலைய உயரதிகாரி ஒருவரை தொடர்பு கொண்ட போது, மக்களின் பொறுப்பற்ற செயற்பாடே எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட காரணம். ஏற்கனவே விறகு அடுப்புகளை பாவித்து வந்த மக்கள் தற்போது பெய்து வரும் மழை காரணமாக அவ்வடுப்புகளை கைவிட்டு எரிவாயு அடுப்புகளில் நாட்டம் கொண்டுள்ளனர்.இவ்வாறான நிர்ப்பந்தம் காரணமாகவும் ஒரே நேரத்தில் பொதுமக்களிடம் இருந்து எரிவாயுக்கான கேள்விகளும் அதிகரிப்பதனால் தட்டுப்பாடுகள் ஏற்படுகின்றன.

எமது நற்பிட்டிமுனை லிட்ரோ எரிவாயு விநியோக நிலைய மொத்த விற்பனை நிலையத்திற்கு எடுத்து வரப்பட்ட சுமார் 1000 க்கும் அதிகமான சிலிண்டர்கள் ஒவ்வொரு நாளும் வாகனங்களில் ஏற்றப்பட்டு விநியோகம் இடம் பெற்று வருகின்றது. செயற்கை தட்டுப்பாடு என்ற செய்தி உண்மைக்கு புறம்பானது.

அத்துடன் எரிவாயுக்கான விலைக்குறைப்பு தொடர்பான அறிவித்தலை நம்பி இருந்து சுயநலமாக செயற்பட்ட மக்கள் அதன் பின்னர் திடீரென எரிவாயுவை கொள்வனவு செய்த செயற்பாடும் தட்டுப்பாடு நிலவ மற்றுமொரு காரணமாகும்-என்றார். (அ)



# ‘திருக்கோணேஸ்வரம்’ நூல் திருமலையிலும் அறிமுகம்

திருமலை, நவ. 18

வரலாற்று சிறப்புமிக்க திருக்கோண்ணேஸ்வர ஆலயத்தின் யாழ்ப்பாணப் பல்கலைகழக வேந்தர் தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன் எமுதிய வரலாற்றுப் பதிப்பான திருக்கோணேஸ்வரம்” எனும் தொல்லியல் சான்றுகளை உள்ளடக்கியதான நூலின் அறிமுக விழா திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயப் பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க் கிழமை மாலை 3.30 மணிக்கு திருகோணமலை நகரசபை பொது நூலகத்தில் திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபைத் தலைவரும், சட்டத்தரணியுமான எஸ்.துஷ்யந்தன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் வரவேற்புரையினை மக்கள் கலை அரங்கின், கலை இலக்கிய செயற்பாட்டாளர் வ.தர்மபவன் நிகழ்த்தினார்.

ஊடகவியலாளரும் ஓய்வு பெற்ற அதிபருமான திருமலை நவம் நூலின் அறிமுக உரை நிகழ்த்த, நூல் தொடர் பான கருத்துரைகளை யாழ் பல்கலைக்கழக தமிழ்துறை மேனாள் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வரலாற்றுத் துறை மேனாள் பேராசிரியர் ப.புஸ்பரெட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் சட்டத்தரணிகள், மருத்துவர்கள், இலக்கிய ஆர்வலர்கள், அரச,அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், இந்து ஆலய குருமார்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். (அ)

# போலந்தில் விழுந்த ஏவுகணையை ரஷ்யா ஏவவில்லை; ஆனால் இறுதிப்பொறுப்பை அவர்களே ஏற்கவேண்டும்!

## உக்ரைனின் கூட்டாளிகள் வலியுறுத்து



பிரஸ்ஸல்ஸ், நவ. 18

போலந்தை தாக்கிய ஏவுகணை உக்ரைனில் இருந்து ஏவப்பட்டது. அது ரஷ்யாவால் ஏவப்பட்டது அல்ல என்பதை மேற்கத்திய தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். அவர்களின் அறிக்கைகள் பதற்றங்களைத் தளர்த்தியுள்ளன.

உக்ரைனின் எஸ்-300 ஏவுகணை போலந்தில் வீழ்ந்து வெடித்ததால் இரண்டு பேர் கொல்லப்பட்டதாக ரஷ்யா கூறியது. உக்ரைன் எல்லையிலிருந்து 35 கிலோமீற்றர் தொலைவில் இருந்த போலந்து கிராமத்திலேயே ஏவுகணை வெடித்தது என்றும் கூறியது.

போலந்தின் ஜனாதிபதி ஆண்ட்ரேஜ் டுடா கூட ஏவுகணை "வேண்டுமென்றே தாக்குதல்" என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றும், அது ஒரு விபத்து என்றும் குறிப்பிட்டார்.

இதையடுத்து, முழு அளவிலான போரின் அச்சம் தவிர்க்கப்பட்டது.

ஆனால் உக்ரைன் அறிக்கைகளை மறுத்துள்ளது. சம்பவத்திற்கு ரஷ்யாவை குற்றம் சாட்டியது. விசாரணைக்க ாக குண்டுவெடிப்பு நடந்த இடத்திற்கு "உடனடி அணுகல்" கோரியது.

உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியும் வழக்கம் போல, அந்த ஏவுகணையை ரஷ்யாதான் ஏவியது என்று கூறினார்.

"இது எங்கள் ஏவுகணை இல்லை என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. இது எங்கள் இராணுவ அறிக்கைகளின் அடிப்படையில் ரஷ்ய ஏவுகணை என்று நான் நம்புகிறேன்," என்று புதன் மாலை தொலைக்காட்சி கருத்துக்களில் ஜெலென்ஸ்கி கூறினார்.

ஒருபுறம், போலந்தில் நடந்த ஏவுகணை சம்பவத்திற்கும் தனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று ரஷ்யா தெளிவுபடுத்தியுள்ளது, ஆனால் அமெரிக்கா ரஷ்யா "இறுதிப் பொறுப்பை ஏற்கிறது" என்று கூறியது.

ரஷ்ய படைகள் உக்ரேனிய குடிமக்கள் மற்றும் உள்கட்டமைப்பை குறிவைத்துள்ளதால் குண்டு வெடிப்புக்கு இறுதியில் ரஷ்யாதான் பொறுப்பு என்று அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லாயிட் ஆஸ்டின் புதனன்று கூறினார்.

உக்ரைன் பாதுகாப்புத் தொடர்புக் குழுவின் மெய்நிகர் கூட்டத்தில், ஆஸ்டின் கூறினார்: "நாங்கள் எங்கள் நட்பு நாடான போலந்துடனும் மற்றவர்களுடனும் தொடர்ந்து நெருக்கமாகப் பணியாற்றுவோம், மேலும் தகவல்களைச் சேகரிப்போம், மேலும் எங்கள் நேட்டோ நட்பு நாடுகள் மற்றும் எங்கள் மதிப்புமிக்க பங்காளிகளுடன் நாங்கள் தொடர்ந்து ஆலோசனை நடத்துவோம். "

"எங்களுக்குத் தெரியும், இது வெளிவரும் சூழல். ரஷ்யா போர்க்களத்தில் பின்னடைவை எதிர்கொள்கிறது, மேலும் ரஷ்யா உக்ரேனிய குடிமக்கள் மற்றும் குடிமக்களின் உள்கட்டமைப்பை அதன் துப்பாக்கிப் பார்வையில் வைக்கிறது," என்று அவர் மேலும் கூறினார்.

உக்ரைனை ஆதரிக்கும் நாடுகளை உள்ளடக்கிய குழுவின் மெய்நிகர் சந்திப்பை ஆஸ்டின் ஆரம்பித்து வைத்தார்.

பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் புத்திசாலித்தனமாக, போலந்து குண்டுவெடிப்பு உக்ரைனில் "ரஷ்யாவின் ஆக்கிரமிப்பின் விளைவாகும்" மற்றும் "அது நடந்ததற்கு ஒரே காரணம்" என்று கூறினார்.

நேட்டோ தலைவர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் ரஷ்யாவை நேரடியாக குற்றம் சாட்டினார். "இது உக்ரைனின் தவறு அல்ல" என்று அவர் கூறினார். நேட்டோ தூதர்களின் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய பிறகு, ஸ்டோல்டன்பெர்க், "உக்ரைனுக்கு எதிரான அதன் சட்டவிரோதப் போரைத் தொடர்வதால் ரஷ்யா இறுதிப் பொறுப்பை ஏற்கிறது" என்றார்.

செவ்வாயன்று ரஷ்யா உக்ரைன் முழுவதும் ஏராளம் ஏவுகணைகளை ஏவி தாக்குதல்களை நடத்தியதைத் தொடர்ந்து கிழக்கு போலந்தில் வெடிப்பு ஏற்பட்டது என்றும் அறிக்கைகள் குறிப்பிட்டுள்ளன. இதைத் தொடர்ந்து, மில்லியன் கணக்கான மக்களுக்கு மின்சாரம் துண்டிக்க வழிவகுத்தது என்று உக்ரைன் கூறியது.

நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் புதன்கிழமை, போலந்தில் நடந்தது விமான எதிர்ப்பு ஏவுகணை வெடிப்பின் விளைவாக விளைவாக இருக்கலாம், ஆனால் மாஸ்கோ போருக்குப் பின்னால் இருப்பதால் ரஷ்யா "இறுதிப் பொறுப்பை" ஏற்கிறது என்று கூறினார்.

உக்ரைன் எல்லைக்கு அருகில் போலந்தின் கிழக்கில் செவ்வாயன்று நடந்த குண்டுவெடிப்பில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். (அ)



## 271 பேருடன் சென்ற படகில் தீ பரவல்!

ஜகார்த்தா, நவ. 18

இந்தோனேசியாவின் பாலி அருகே 271 பேருடன் சென்ற படகில் தீ பரவல் ஏற்பட்டதாக அந்நாட்டுச் செய்திகள் தெரிவித்துள்ளன.

லிம்பர் துறைமுகத்தில் இருந்து கீட்டாபாங் நகரத்தை நோக்கி சென்ற குறித்த படகில் 236 பயணிகளும், 35 பணியாளர்களும் இருந்தனர். காரங்கசேசம் கடற்கரையில் இருந்து சுமார் 1.5 கி.மீ. தூரத்தில் இருந்த போது அந்த படகில் தீ விபத்து ஏற்பட்டதையடுத்து அதிலிருந்த பயணிகளைக் காப் பாற்ற இரண்டு கடற்படைக் கப்பல்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தன.

மீட்புப் படையினரும், மீனவர்களும் பயணிகளை மீட்கும் பணியில் ஈடுபட்டு வரும் நிலையில், பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் தெரியவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2018 ஆம் ஆண்டு வடக்கு சுமத்திரா மாகாணத்தில் அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 167 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பிரிட்டனில் தாய்மார்கள் கர்ப்ப காலத்தில் இறக்கும் வாய்ப்பு மூன்று மடங்கு அதிகம்!



லண்டன், நவ. 18

பிரித்தானியாவில் தாய்மார்கள் கர்ப்ப காலத்தில் இறப்பதற்கான வாய்ப்பு மூன்று மடங்கு அதிகம் என ஒரு புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

எட்டு ஐரோப்பிய நாடுகளின் மகப்பேறு இறப்பு வீதங்களை ஒப்பிடுகையில், தாய்மார்கள் கர்ப்ப காலத்தில் இறப்பதற்கான வாய்ப்பு ஸ்லோவாக்கியாவில் அதிகமாக இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் இங்கிலாந்து இரண்டாவது இடத்தில் உள்ளது.

புதிய ஆய்வு, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் கல்வியாளர்கள் உட்பட சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் குழு, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, நோர்வே, ஸ்லோவாக்கியா மற்றும் பிரித்தானியா முழுவதும் மில்லியன் கணக்கான நேரடி பிறப்புகளின் தரவுகளை ஆய்வு செய்தது.

பிரித்தானிய தரவு 2016 மற்றும் 2018ஆம் ஆண்டுக்கு இடையில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான நேரடி பிறப்புகளின் தகவலை உள்ளடக்கியது.

கர்ப்ப காலத்தில் தாய்மார்களிடையே இறப்பு வீதம் மற்றும் அவர்களின் குழந்தை பிறந்த 42 நாட்கள் வரையிலான இறப்பு வீதம் நோர்வேயில் 100,000 உயிருள்ள பிறப்புகளுக்கு 2.7 முதல் ஸ்லோவாக்கி யாவில் 100,000க்கு 10.9 வரை வேறுபடுகிறது.

பிரித்தானியாவில் பிறக்கும் 100,000 குழந்தைகளுக்கு 9.6 தாய்வழி இறப்புகள் உள்ளன. அனைத்து எட்டு நாடுகளிலும், தாய்வழி இறப்புகள் இளைய மற்றும் வயதான தாய்மார்களில் அதிகமாக இருந்தன.

ஏழு நாடுகளில், வெளிநாட்டில் பிறந்த தாய்மார்கள் அல்லது சிறுபான்மை இனப் பின்னணியைக் கொண்ட தாய்மார்கள் 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட தாய் இறப்பு அபாயத்தைக் கொண்டுள்ளனர்.

இதய நோய் மற்றும் தற்கொலையே மரணத்திற்கு முக்கியக் காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். பிரித்தானியாவில் புதிய தாய்மார்களிடையே இரத்தக் கட்டிகளும் ஒரு முக்கிய காரணமாகும். (அ)

# பிரதிநிதிகள் சபையின் கட்டுப்பாட்டை மீள கைப்பற்றிய அமெ. குடியரசு கட்சி!

நியூயோர்க், நவ. 18

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் குடியரசுக் கட்சியினர், பிரதிநிதிகள் சபையின் கட்டுப்பாட்டை மீண்டும் கைப்பற்றியுள்ளனர்.

கலிபோர்னியாவின் 27ஆவது காங்கிரஸ் மாவட்டத்தில் குடியரசுக் கட்சியின் மைக் கார்சியாவை வெற்றி பெற்றதாக அறிவித்தது.

இடைக்காலத் தேர்தலுக்கு ஒரு வாரத்திற்குப் பிறகு, காங்கிரஸின் கீழ் பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மைக்கு தேவையான 218 இடங்களை குடியரசுக் கட்சியினர் பெற்றுள்ளனர்

குடியரசுக் கட்சியின் சிறுபான்மைத் தலைவர் கெவின் மெக்கார்த்தியை தனது கட்சி, பரிந்துரைத்த பின்னர் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் புதிய காங்கிரஸ் கூடும்போது அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகராக அவர் வருவார்.

2019ஆம் ஆண்டு முதல் பதவி வகித்த ஜனநாயகக் கட்சியின் நான்சி பெலோசிக்குப் பதிலாக அவர் பதவியேற்பார். இந்த வெற்றியின் மூலம் ஜனாதிபதி ஜோ பைட னின் நிகழ்ச்சி நிரலை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு குடியரசு கட்சினரால் முடக்க முடியும்.

ஆனால், ஜனவரி மாதம் புதிய காங்கிரஸ் கூடும் போது ஜனநாயகக் கட்சியினர் செனட்டின் கட்டுப்பாட்டை வைத்திருப்பார்கள். (அ)



## ஏ. ரி. பி. ரென்னிஸ் ஜொகோவிச் வெற்றி!

டுரின், நவ. 18

ஏ. ரி. பி. ரென்னிஸ் இறுதிச்சுற்றில் நேற்று நடந்த போட்டியில் ஜொகோவிச் வெற்றி பெற்றார்.

ஆண்டு இறுதியில் ஏ. ரி. பி. இறுதிசுற்று எனப் படும் ஆண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி நடத்தப்படுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான தொடர் இத்தாலியின் டுரின் நகரில் நடக்கிறது. இதில், தரவரி சையில் முதல் - 8 இடங்களை வகிக்கும் வீரர்கள் மட்டும் பங்கேற்கிறார்கள்.

அவர்கள் இரு அணிகளாக பிரிக்கப்பட்டு ஒவ் வொரு வீரரும் தங்கள் பிரிவில் உள்ள மற்றவர்களுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். முதல் இரு இடங்க ளை பிடிக்கும் வீரர்கள் அரையிறுதிக்கு தகுதி பெறு வார்கள்.

நேற்று நடந்த போட்டி ஒன்றில் ஜொகோவிச் (சேர்பியா) - அண்ட்ரு ரூபலெவ் (ரஷ்யா) மோதினர். விறுவிறுப்பாக நடந்த இந்த போட்டியில் ஜொகோவிச் 6-4, 6-1 என்ற செற் கணக்கில் ரூபலெவை வீழ்த்தி வெற்றி பெற்றார். (ஐ)

### ஏ. ரி. பி. ரென்னிஸ் தொடர்:

## நடால் மீண்டும் அதிர்ச்சி தோல்வி அரையிறுதி வாய்ப்பை இழந்தார்



டுரின், நவ. 18

ஏ. ரி. பி. ரென்னிஸ் இறுதிச்சுற்று தொடரின் இரண்டாவது போட்டியிலும் ரபேல் நடால் தோல் வியை தழுவினார். இதனால், அவர் அரையிறுதிக்கு தகுதி பெறும் வாய்ப்பை முற்றாக இழந்தார்.

ஆண்டு இறுதியில் ஏ. ரி. பி. இறுதிசுற்று எனப் படும் ஆண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி நடத்தப்படுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான தொடர் இத்தாலியின் டுரின் நகரில் நடக்கிறது. இதில், தரவரிசையில் முதல் - 8 இடங்களை வகிக்கும் வீரர்கள் மட்டும் பங்கேற்கிறார்கள்.

அவர்கள் இரு அணிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வீரரும் தங்கள் பிரிவில் உள்ள மற்றவர்க ளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். முதல் இரு இடங்களை பிடிக்கும் வீரர்கள் அரையிறுதிக்கு தகுதி பெறுவார்கள்.

நேற்று நடந்த மற்றொரு போட்டியில் முதல்நிலை வீரரான ரபேல் நடால் (ஸ்பெயின்) 3-6, 4-6 என்ற நேர் செற்றில் தரவரிசையில் 6ஆவது இடத்தில் உள்ள கனடா வீரர் பெலிக்ஸ் அகர் அலியாசிம்மிடம் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

முதலாவது போட்டியில் டெய்லர் பிரைட்ஸ்சிடம் தோல்வி கண்டிருந்த நடால் தொடர்ச்சியாக சந்தித்த 2ஆவது தோல்வி இதுவாகும். இதன் மூலம் நடால் அரையிறுதி வாய்ப்பை இழந்தார். (ஐ)

# இங்கிலாந்தை வீழ்த்தியது ஆஸி!

அடிலெய்ட், நவ. 18

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் 6 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவில் தற்போது ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. நேற்று அடிலெய்டில் நடந்த போட்டியில் நாணயச் சுழற்சி யில் வென்ற அவுஸ்திலேயா முதலில் களத்தடுப் பைத் தெரிவு செய்தது.

முதலில் ஆடிய டேவிட் மலனின் அதிரடி சதத்தின் உதவியுடன் 50 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 287 ஓட்டங்களை எடுத்தது. இதனால், அவுஸ்திரேலிய அணிக்கு வெற்றி இலக்காக 288 ஓட்டங்கள் நிர்ண யிக்கப்பட்டது.

இந்த இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு அபாரமான ஆரம்பத் துடுப்பாட்டத்தை டேவிட் வோர்ணர், ட்ராவிஸ் ஹெட் வழங்கினர். ஹெட் 57 பந்துகளில் 10 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 69 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க, அடுத்து வந்த ஸ்ரீபன் ஸ்மித் அதிரடி காட்டினார்.

இதனிடையே, 10 பௌண்ட்ரிகள் ஒரு சிக்ஸருடன் 86 ஓட்டங்களை எடுத்த வோர்ணர் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த, லபுசாக்னே 4, அலெக்ஸ் ஹாரி 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

எனினும் ஸ்ரீபன் ஸ்மித், கிறீன் ஆகியோர் அபார மாக விளையாடினர். இதனால், 46.5 ஓவர்களில் 4 விக்கெட்களை மட்டும் இழந்த அவுஸ்திரேலியா 291 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

ஸ்ரீபன் ஸ்மித் 9 பௌண்ட்ரிகள் ஒரு சிக்ஸருடன் 80 ஓட்டங்களையும் , கிறீன் 20 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில், டேவிட் வில்லி 2 விக்கெட்களையும், ஜோர்தான், டவுசன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு தொடக்கம் சரியாக அமையவில்லை. மூன் றாவது வீரராக களமிறங்கிய டேவிட் மலன் மட்டுமே நம்பிக்கை கொடுத்தார். அவர் அபாரமாக ஆடி 12 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 134 ஓட்டங்களை குவித்தார்.




அவர் தவிர, டேவிட் வில்லி ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும், ஜோஸ் பட்லர் 29, ஜோர்தான் 14 ஓட்டங்களை எடுத்தனர்.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் பட் கம்மின்ஸ், அடம் ஷம்பா ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக டேவிட் மலன் தெரிவா னார். (ஐ)

# தனுஷ்கவுக்கு பிணை

சிட்னி, நவ. 18

பாலியல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட இலங்கையின் தனுஷ்க குணதிலக்கவுக்கு சிட்னி நீதிமன்றம் நேற்று பிணை வழங்கி யது.

அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறக்கூடாது, இரவு 9 மணிமுதல் காலை 6 மணி வரை வெளியில் நடமாடக்கூடாது, சமூகவலைதளங்களை பயன்படுத் தக்கூடாது என்ற நிபந்தனைகளு டன் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலரை செலுத்தி (சுமார் 3.7 கோடி இலங்கை ரூபாய்) பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணை




எதிர்வரும் ஜனவரி 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தனுஷ்க குணதிலக மீது அவுஸ்திரேலிய பெண் ஒருவர் வன்புணர்வு குற்றச்சாட்டு சுமத்தி யிருந்தார் என்பது குறிப்பிடத்தக் கது. (ஐ)

### உலகக் கிண்ண பயிற்சி போட்டி:

# ஆர்ஜென்ரீனா கோல் மழை; அரபு எமிரேட்ஸ் தோல்வி!

அபுதாபி, நவ. 18

மெஸ்ஸி உள்ளிட்ட ஆர்ஜென்ரீனா அணி வீரர்கள் கோல் மழை பொழிந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸை படுதோல்வி அடையச்செய்தனர்.

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடர் நாளை மறுதினம் கட்டாரில் ஆரம்பமாகிறது.

இந்நிலையில், நேற்று அபுதாபியில் நடந்த பயிற்சி போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸும் மெஸ்ஸி



தலைமையிலான ஆர்ஜென்ரீனா அணியும் மோதின.

இந்த போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆர்ஜென்ரீனா அணி வீரர்கள் கோல் மழை பொழிந்தனர்.

இறுதியில் ஆர்ஜென்ரீனா அணி 5-0 என்ற கோல் கணக்கில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. ஆர்ஜென்ரீனா

அணி தரப்பில் ஏஞ்சல் டி மரியா இரண்டு கோல்களும், லயனல் மெஸ்ஸி, ஜூலியன் அல்வாரெஸ் மற்றும் ஜோக்வின் கொரியா ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். (ஐ)

# ஆணைக்குழுவின் செயல்பாட்டாலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தாமதம்!

## டிலான் பெரேரா எம்.பி. விசனம்



கொழும்பு, நவ. 18

**தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாட்டினாலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாமல் உள்ளதாக சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சியை தோல்வியடைச் செய்ய வேண்டும்.

தேர்தல் ஆணைக்குழு இல்லா விட்டால், தேர்தல் திணைக்களம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை இலகுவாக நடத்தியிருக்கும். சமன் ரத்னா நயக்க உள்ளிட்ட தேர்தல் திணைக்கள அதிகாரிகளுக்கு, உள்ளூராட்சித் தேர் தலை நடத்தும் அந்த அதிகாரத்தை எவரும் இல்லாது செய்யக்கூடாது. மீறி, அவ்வாறு எவரேனும் செயற்படுவார்களாயின் நாம் நீதிமன்றின் ஊடாக உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம்-என்றார். (அ)

# மோட்டார் வாகனங்களின் பதிவுக் கட்டணம் உயர்வு!

கொழும்பு, நவ. 18

இன்று வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் மோட்டார் வாகனப் பதிவுக் கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, சாதாரண முறையின் கீழ் வாகனங்களை பதிவு செய்ய 2,000 ரூபாய் கட்டணமும் முன்னுரிமை அடிப்படையிலான கட்டணம் 3,000 ரூபாயாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன் ஒருநாள் சேவையின் கீழ், வாகனங்களை பதிவு செய்வதற்கான கட்டணம் 4,000 ரூபாயாகவும் தாமதமாகி செலுத்தப்படும் பதிவுக் கட்டணங்கள் பல்வேறு கட்டங்களாக அதிகரிக்கப்படவுள்ளன.

அவ்வாறு தாமதக் கட்டணமாக காருக்கு நாளொன்றுக்கு 100 ரூபாயும், மோட்டார் சைக்கிளுக்கு 50 ரூபாயும் அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பதிவு செய்யப்பட்ட வாகனச் சான்றிதழின் விவரங்களை மாற்றுவதற்கு 3,000 ரூபா கட்டணம் வசூலிக்கப்படும். (அ)

# துயிலும் இல்லங்களில் தங்கியுள்ள இராணுவம் வெளியேறவேண்டும்!

## கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, நவ. 18

துயிலும் இல்லங்களில் உள்ள இராணுவத்தினர் வெளியேற்றப்பட்டு, அதன் புனிதத்தைப் பாதுகாக்க அனுமதி வழங்கப்பட வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கேட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தின் 2 ஆம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் இந்த கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள பல துயிலும் இல்லங்களை இராணுவம் இன்னும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டுள்ள துயிலும் இல்லங்களில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும்.

மேலும், வடக்கு, கிழக்கு மக்கள் கேளிக்கை நிகழ்வுகளை தவிர்த்து இம்மாதத்தை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க வேண்டும்-என்றார். (அ)

# மடிக்கணினிக்கு மின்சாரத்தை வழங்கியபோது மாணவன் பலி!

கொழும்பு, நவ. 18

மடிக்கணினியின் சார்ஜரை மின் செருகியுடன் இணைக்க முயன்ற 14 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் மின்சாரம் தாக்கி நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அம்பலாங்கொடை இடிகட்டிய பகுதியைச் சேர்ந்த செனத் இந்துவர என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெறும்போது மாணவர் குளித்திருந்தார் எனவும் ஈரத்துணியை அணிந்திருந்தார் எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

மின்சாரம் தாக்கியபோது மடிக்கணினியை அவர் மடியில் வைத்திருந்தார். அப்போது அவர் ஈரமான துண்டை அணிந்திருந்தார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

மின்சாரம் தாக்கியதில் பலத்த காயமடைந்த இந்த மாணவன் முதலில் அம்பலாங்கொடை பொலத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பின்னர் பலப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட மாணவன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 2 முன்னாள் ஜனாதிபதிகள் உள்ள அரசால் தமிழரின் பிரச்னைக்கு தீர்வு காணமுடியும்

## அமைச்சர் மஹிந்த அமரவீர நம்பிக்கை



கொழும்பு, நவ. 18

முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் உள்ள இந்த அரசாங்கத்தினால் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும் என அமைச்சர் மஹிந்த அமர வீர தெரிவித்தார்.

இதற்கு தமிழ் அரசியல் தரப்பினர் அவநம்பிக்கையை துறந்து ஒரு சில விடயங்களில் விட்டுக்கொடுப்புடன் செயற்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நேற்று முன் தினம் பாராளுமன்றில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற் றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புலம் பெயர் தமிழ் அமைப்புக்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் ஆதரவு வழங்க வேண்டும்.

பல ஆண்டு காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் கூட்டமைப்பும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.

நாட்டின் தேசிய பிரச்னையாகவுள்ள தமிழ் மக்க ளின் பிரச்னைகளுக்கு இந்த அரசில் பேச்சு வார்த்தை ஊடாக தீர்வு காண முடியும்-என்றார். (அ)

# கனேடிய தமிழர் பேரவை முன்வைத்த 10 கோரிக்கைகள் குறித்து அவதானம்

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, நவ. 18

கனேடியத் தமிழர் பேரவை முன்வைத்துள்ள தமிழ் மக்கள் சார்ந்து நிறைவேற்றப்படவேண்டிய 10 கோரிக்கைகள் குறித்து அவதானம் செலுத்தப்படும் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் தம்மோடு இணைந்து பணியாற்ற சர்வதேச நாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு நீதி அமைச்சர் விஜேதாஸ அழைப்பும் விடுத்துள்ளார்.

குறித்த 10 கோரிக்கைகள் அடங்கிய கடிதமொன்று கனேடியத் தமிழர் பேரவையினால் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவிடம் நேற்று முன் தினம் புதன்கிழமை கையளிக்கப்பட்டது.

இது குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் நீதி அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகள் தமது அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

மேலும் தமிழ் மக்கள் மத்தியில் அரசாங்கம் மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடிய வகையில் தாம் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பருத்தித்துறை கடற்பரப்பில் 14 தமிழக மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், நவ. 18

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 14 தமிழக மீனவர்கள் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை கடற்பரப்புக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் குறித்த 14 தமிழக மீனவர்களும் கைது செய்யப்பட்டதுடன், அவர்களின் படகொன்றையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# வசந்த முதலிகே, சிறிதம்ம தேரரின் விளக்கமறியல் நீடிக்கப்படக்கூடாது

## சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு, நவ. 18
பயங்கரவாத குற்றச்சாட்டுக்கவில் 90 நாட்கள் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.
சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பிராந்தியத்திற்கான ஆய்வாளர் தியாகி ருவன் பத்திரன வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
மேலும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயற்பாட்டாளர் மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரின் தடுத்து வைக்கும் உத்தரவு மேலும் நீடிக்கப்படக்கூடாது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(அ)

## கிளிநொச்சியில் மரம் நடுகை



கிளிநொச்சி, நவ. 18
மரம் நடுவோம் தேசத்தை காப்போம் எனும் தொனிப்பொருளில் மரம் நடுகை கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது.
நேற்று வியாழக்கிழமை இரணைமடுக்குளத்தை அண்டிய பிரதேசங்களில் 500 மரக்கன்றுகள் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் பிரிவின் அனுசரணையுடன் கார்த்திகை மாதமான மரநடுகை மாதமாக கொண்டு நாட்டப்பட்டது.
இந்த நிகழ்வில் விருந்தினர்களாக விவசாய மற்றும் கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன மீன்பிடி நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர்கள் கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இ.போ.சவின் ஊழியர்கள் 22ஆம் திகதி போராட்டம்

கொழும்பு, நவ. 18
போக்குவரத்து சபை ஊழியர்களின் பொதுச் சம்பளம் நடைமுறைப்படுத்தல் மற்றும் ஊழியர்களின் அடக்குமுறைக்கு எதிராக எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு தலைமையகத்தில் முற்றுகைப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்க தொழிற்சங்க குறித்த போராட்டத்தை தொழிற்சங்கக் கூட்டமைப்பு உரிமை கோரியுள்ளது.
இப்போராட்டத்துக்கு அனைத்து இ.போ.ச ஊழியர்களும் அன்றைய தினம் கொழும்பு தலைமையக வளாகத்தில் ஒன்றிணையுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மன்னிப்பு கோரிய பொலிஸ் மா அதிபர்

கொழும்பு, நவ. 18
பொய்யான சாட்சியங்களை உருவாக்கிப் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட பொலிஸ் பரிசோதகர் சுதத் மெண்டிஸை மீண்டும் பணியில் அமர்த்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டபோதிலும், அந்த உத்தரவை பின்பற்றாமைக்கு தான் நிபந்தனையற்ற மன்னிப்பை தெரிவிப்பதாக பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தார்.
நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பொலிஸ் பரிசோதகருக்கு நிலுவை சம்பளத்துடன் மீண்டும் வேலை வழங்கப்படுமெனவும் பொலிஸ் மா அதிபர் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
இந்த மனு நீதிபதிகள் எஸ்.சுரேராஜா, பிரியந்த ஜயவர்தன மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. உயர் நீதிமன்ற உத்தரவின்படி, பொலிஸ் மா அதிபர் நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் ஆஜரானார். (அ)

## கிணற்றுக்குள் தவறி விழுந்து 9 வயது சிறுவன் உயிரிழப்பு!

வவுனியா, நவ. 18
வவுனியா, செட்டிகுளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் பாதுகாப்பற்ற கிணறொன்றுக்குள் வீழ்ந்து 09 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
வீட்டுக்கு அருகில் வெட்டப்பட்டிருந்த கிணற்றில் நீர் நிரம்பி காணப்பட்டுள்ளதுடன், குறித்த சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தபோது தவறுதலாக கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளார்.
இதனையடுத்து, மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது சிறுவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
சிறுவனின் சடலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.
மேலதிக விசாரணைகள் செட்டிகுளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ)

## இராமகிருஷ்ண ம.வியில் முத்திரைக் கண்காட்சி



யாழ்ப்பாணம், நவ. 18
பாடசாலை மாணவர்களிடையே சிறந்த பொழுதுபோக்கினை ஏற்படுத்தும் நோக்கோடு முத்திரை கண்காட்சி கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.
நேற்று வியாழக்கிழமை கொக்குவில் தபால் அலுவலகத்தின் தபால் அதிபர் தலைமையில் குறித்த கண்காட்சி இடம்பெற்றது.
இதில் கருத்து தெரிவித்த தபால் அதிபர் "முன்னைய காலங்களில் மாணவர்கள் முதல் பெரியவர் வரை முத்திரைகளைச் சேகரித்து அவற்றை காட்சிப்படுத்துதல், முத்திரைகளை நினைவுச் சின்னமாக பேணிப் பாதுகாத்தல், அதனூடாக வருமானத்தை மேம்படுத்தும் பொழுதுபோக்கு அம்சங்கள் காணப்பட்டு வந்தன.
ஆனால் தற்போது முத்திரை சேகரிக்கும் பழக்கம் மிகவும் அரிதாகவே உள்ளது. அத்துடன் போதைப் பொருள் பாவனை உள்ளிட்ட தேவையற்ற விடயங்களில் ஈடுபட்டு மாணவர்கள் எதிர்காலத்தை வீணடிக்கின்றனர் - என்றார்.
இவற்றைக் கருத்தில் கொண்டு மாணவர்களிடையே சிறந்த பொழுதுபோக்கை உருவாக்கும் நோக்குடன் குறித்த முத்திரைக் கண்காட்சி இடம்பெற்றது. (அ)




## இலங்கையில் பிறந்த தினத்தை கொண்டாடிய சிறில் ரமபோசா

கொழும்பு, நவ. 18
தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா குறுகிய கால விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இரவு இலங்கை வந்துள்ளார்.
ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்றதன் பின்னர் அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் சந்தித்து இரு தரப்பு பிரச்சனைகள் குறித்து அவர் கலந்துரையாடியதாக ஜனாதிபதி ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது.
இதேவேளை, இந்தச் சந்திப்பின்போது, கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில்,



தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசாவின் பிறந்த நாளை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.
இந்த கொண்டாட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.